167

உ

கடவுள் துணை.

இவை

வித்வசிரோன்மணியாகிய

புகழேந்திப்புலவர்களியற்றிய

சீராளன் அம்மானையென்னும்

சிறுத்தொண்டபத்தன் கதை.

167
4.22

OCT 1922

சென்னை, திருவொற்றியூர்.

டி. எஸ். ராமாநுஜ அய்யங்கார்.

அவர்களது,

ஸ்ரீ ராமாநுஜம் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1922.

[அணா-4

U-8(9PU,C
N22
178160

உ

கடவுள் துணை.

இவை

வித்வசிரோன்மணியாகிய

புகழேந்திப்புலவர்களியற்றிய

சீராளன் அம்மானையென்னும்

சிறுத்தொண்டபத்தன்கதை.

:0:

OFFICE OF THE REGISTRAR OF
6-OCT 1922
MADRAS

சென்னை-திருவொற்றியூர்,

டி. எஸ், ராமாநுஜ அய்யங்கார்

அவர்களது

ஸ்ரீ ராமாநுஜம் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது

1922

இதன் விலை] [அணா-4

494.8113
3215

சென்னை-600 090.
178160

உ

கடவுள் துணை.

சிறுத்தொண்டபத்தன்கதை.

விநாயகர்—தோத்திரம்.

முன்னின்றுவரந்தரும் பிள்ளையாரேகந்தர்
முக்கண்ணர்பெற்றெடுத்த முதலோனே
சென்றுதிசைவென்றுவரும் பிள்ளையாரேகந்தர்
தீங்கொன்றுவாராமல் காத்தளிப்பாய்
கொம்பனேவுமைவாழும் சிறியானேயின்னம்
குஞ்சரமுகந்தனின் மூத்தோனே
நப்பின்னைநாரணன் மருகோனேயின்னம்
நந்துமையாள்பெற்றெடுத்த நாதனேரே
தம்பியேவுலகேழும் வலமாய்வரச்சொன்ன
தந்தைதாயைவலம்வந்த சதிரோனே
ஈசன்மகனேரே பிள்ளையாரேகந்தா
ஈரேழுலகுக்கொரு தனிமுதலே
மாயன்மருகோனே பிள்ளையாரேகந்தர்
வளருங்குழந்தைகுரு பரனையா.

சரஸ்வதி தோத்திரம்.

வாணிகலைவாணிசரஸ்வதியேயெங்கள்
மறையவனாரிட தேவியம்மா
நான்முகனாருடைய நாவிலேநின்றுதமிழ்
நான்மறையோதுவிக்கு தேன்மொழியே
சிறுதொண்டனார்தமிழ் மானுரைக்கத்தினம்
சிந்தையில்வந்துதித்து தெளிவுசொல்வாம்
கன்னகரிப்பாலனும் திருநீற்றுச்சோழனும்
அவரிடவம்மிஷங்கள் மிகவாழ்க
தென்னகரிப்பாலனும் கலியானச்சோழனும்
செங்கோல்முறைகாட்டி யரசாண்டார்
ஆறிலொன்றாகவே வரங்கொண்டான்சோரன்
அன்பானராஜ்யபாரந் தன்னையாண்டான்
ஏழிலொன்றாகவே வரங்கொண்டான்சோழன்
எண்ணிராஜ்யபாரம் தன்னையாண்டான்

கதையின் வரலாறு.

மன்னவனேஐந்து பாண்டவரைவரில்
வணங்காதமுடிபெற்ற கருணராஜன்
காசிந்திதனிலே போயிருந்துகர்ணன்
கையில்சிவலிங்கப் பூசைசெய்தார்
திருச்செங்காட்டிலே சின்னமெடுத்தல்லோ
சிறுதொண்டபத்தனென்று பெயரெடுத்தான்
சிவபூசைஅரிபூசை குருபூசைமறவாமல்

சிறுதொண்டபத்தன் கதை.

திருவெண்காட்டுநங்கையுடன் வாழ்ந்திருந்தான்
சிவனார்வரமளித்த கட்டளைப்படியாக
சீராளதேவனையும் பெற்றெடுத்தார்
சீராளதேவனும் பிறந்தேழுவயதாகி
திருப்பள்ளிக்கூடமாகித் தான்படிப்பான்
இப்படி இருக்கின்ற நாளையில்வெண்காட்டா
ளேதுசொல்வாள் தன்புருஷன் முகம்நோக்கி
நீ—தேடின திரவியம் வேணதுண்டுபத்தா
திருப்பரங்களுக்கன்னம் நீயிடுங்கான்
பொன்னைத்தாபொருளைத்தான் தின்னலாமோபத்தா
அன்னங்கொடுங்காணும் அன்பனாரே.
காசுபணத்தைதான் தின்னலாமோபத்தா
கடைதெருவிலன்னக்கொடி கட்டுமென்றார்
அன்னக்கொடிகட்டுமென்றாய் வெண்காட்டுநங்கையே
அனந்தவுறுதிகள் வேணும்பெண்ணே
உன்மனமாறாற்போல் என்மனமாறாலே
உறுதிதவநிலைக்கும் பெண்ணேயென்றான்
என்மனமாறாற்போல்உன்மனமாறாலே
எள்ளளவுந்தவங் குறையாது
நாலாண்டிக்கிடச்சொன்னால் நீ நாதனுக்கிட்டாலே
அதனால்தவங்கள்புண்ணியம் வருவதுண்டோ
அப்படி கவறுவேனோ அடியாள்நீர்சொன்னசொல்
ஆதிசிவனறியச் சொல்லுகிறேன்
அருமைபிள்ளையொருவன் சீராளன்தன்னை
அதிகத்தவவுறுதி சொல்லுமென்றார்
அப்படியேயாகுமென்று சிறுதொண்டபத்தனார்
அன்னக்கொடியெடுத்துக் கட்டுவாராம்
வருவார்க்கும்போவார்க்கும் அமுதுபடைப்பேனென்று
தலைவாசலன்னக்கொடி கட்டுவானாம்
நின்றநின்றசங்கமர்க்கு அமுதுபடைப்பேனென்று
நிலைபாக அன்னக்கொடி கட்டுவானாம்
சென்றசென்றசங்கமர்க்கு அமுதுபடைப்பேனென்று
தெருவிலேஅன்னக்கொடி கட்டுவானாம்
அன்னக்கொடிநின்றங்கோ வாவென்றழைக்குமாம்
அழகியசிறுத்தொண்டர் வாசலிலே
அன்னக்கொடிவிருதாம் ஆராட்சிப்பொன்மணியும்
அசையுதவனுடைய வாசலிலே
ஆயிரம்பேர்கன்னம் சரியாய்நிறைந்தபின்
ஆராட்சிமணியொன்று அடிபடுமாம்
ஐயாயிரம்பேர்கன்னம் சரியாய்நிறைந்தாலே
ஐந்துகொத்துசுவமணிகளடிபடுமாம்
ஆயிரம்பேர்சொருவர் குறைந்ததேயுண்டானால்
அசையாமலாராட்சி மணியிருக்கும்

ஆயிரம்பேர்களுண்டால் இலையில்பரிகலத்தில்
அவர்களிருவரும் புசித்திடுவார்
ஆயிரம்பேரிலே ஒருவர்குறைவந்தாலே
அருந்தார்களிருவரும் ஜலபானம்
விரதங்கள் குறையாமலே சிறுத்தொண்டபத்தனும்
வெண்காட்டுநங்கையுடன் வாழ்ந்திருந்தான்
இப்படியிருக்கின்ற நாளையிலீஸ்வரன்
ஏதுசொல்வாருமையவள் தன்னுடனே
எனக்குநிகரானோரில்லையென்றுகொண்டான்
எடுத்தானே அன்னக்கொடிவிருதமணி
அன்னக்கொடியறுப்போமோபெண்ணே
அவனுடைய அன்புபக்தி சோதிப்போமோ
பத்தனைப்போலவனடி பார்வதியுமையே
சித்தனைப்போலவனடி சிவத்தொண்டனிவே
பத்தராய்ப்போனாலுஞ் சப்பிரானையும்மை
பலவிரன்றறிவார்கள் மானிடர்கள்
சித்தராய்ப்போனாலும் தம்பிரானைசிவனை
சென்றேரவொட்டார்கள் மானிடர்கள்
மண்ணிலுள்ளமனிதர்கள் மகிழும்படியாக
வைரவர்வேஷத்தை கொள்ளுமென்றான்
கண்டவர்களுனைப்பார்த்து மகிழும்படியாக
கங்காளவேஷத்தைக்கொள்ளுமென்றாள்
உமையவள்சொல்புத்தி நிசமென்றுமெண்ணியே
உத்திராக்ஷந்தாவடந் தரிப்பாராம்
கொங்குகுருந்துமலர் சாத்துவாராமையர்
குவளமபூவன்னிமாலை சாத்துவாராம்
வேங்கையுடனே நல்லாரணலும்பன்னீரும்
விதவிதப்புஷ்பமாக தரிப்பாராம்
விரித்தசடையும்வெண் பரிகள்வெளியாம்
மேலெங்குமேறிவிட்ட விற்படுமே
ஆதித்தசமுசமும் அதிமுக்துத்தாவடமும்
அலங்காரத்துடனே குண்டலமும்
வடித்தபொருளென்ற சிறுத்தொண்டதேவனை
வன்மைகள்சோதிக்க வேண்டுமென்று
கலியுகத்திசைநோக்கி நடக்குபளவினில்
தாலிலையிட்டதொரு பொன்சிலம்பாமையர்
மாரபிலேபூண்டதொரு சங்குநாதம்
கலீகலீயென்று நடப்பாராமையர்
கால்பிணிநூல்பிணி வாராமலே
காணச்சவன்பாலிபம் வேணியில்பார்வதி
காவேரியார்வந்து விளங்குவாராம்
கோங்குகுடகிலே மழையபொழிவெள்ளம்

குமரிகாவேரி வெள்ளம்பெருக
முல்லைவனத்துமலைக் கொள்ளைகொண்டுவெள்ளம்
மூங்கில்வனத்துக்களை முடிக்கவைத்து
சந்தனமரத்தை தறித்தடுக்கிவெள்ளம்
தாருள்ளவாழை நடத்திக்கொண்டு
மஞ்சாளிஞ்சி மலமுள்ளமல்லிகையுடன்
மாதளங்காய்வமத்தை மிதத்திடுமாம்
மேட்டிலேயுள்ளதொரு மேவுபுழுதலை
முழிகள்சிவக்கசெவ்வை மிதந்திடுமாமங்கே
மிருகங்களங்கங்கே வசித்திருக்கும்
காட்டிலேவாழுகின்ற கரடிபுலிசெந்நாய்
கண்கள்சிவக்கசெங்கை மிதந்திடுமாம்
கல்லுருகிவெள்ளிமாலை யுருகிக்கைலாச
பர்வதத்தைவலம்வந்து சூழ்ந்திடுமாம்
அத்தனைவருக்கல்லோ ஐயருடபாதத்தை
புஷ்பமாகவின்றல்லோ பணிந்திடுமாம்
வந்தொருகாவேரியை கைபாலமர்த்தியே
தம்பிரான்கதைவிட்டு யேறுவாரும்
அப்பன்சிறுத்தொண்டன் மனமறியசுவாமி
யாருமில்லாதேசிவ னொருவனுனர்
அந்நேரம்சிவனடியார்களைக் காணமல்
அவருடதேவியுட னேதுசொல்வான்
இந்நேரந்திருப்பேருக் காயிரம்பேர்க்கன்னம்
ஈந்திடுவோம்பெண்ணே நாமென்னசெய்வோம்
இன்றைக்கொருவரும் இல்லாமற்போச்சுது
இப்பொழுதேதேடிக்கொண்டு நான்வருவேன்
வந்தொருசங்கமருக் கன்னங்கொடுத்துப்பெண்ணே
மலர்ப்பாதம் பணிந்தே தொழுதிடவும்
திருப்பெரும்மடங்களைத் தேடப்போனனன்பன்
சிவனொருமந்தவனை வருகலுற்றார்
திருவடிக்கமலமுந் திருச்சிலம்போசையும்
கையினில்சூலமும் டமருகமும்
ஆடிபடமரகம் சாடிப்பாராமையா
அண்டரண்டபகிரண்ட மதிர்ந்திடவே
திருக்கையில்டமரகம் சாடிப்பாராமையர்
தெய்வலோகாபுவனங்க ளதிர்ந்திடவே
தெருவிலேவிளையாடும் சிறுபிள்ளைகள்தம்பி
சிறுத்தொண்டமடமேது சொல்லுமென்றார்
அறியார்க்கறியவேதான் தம்பிரானேசிவனே
அதோவல்லோதோணுபார் அன்னக்கொடி
தெரியார்க்குத் தெரியவேதான் தம்பிரானே சிவனே
அதோவல்லோ தோணுதுபார் அன்னக்கொடி
சிறுத்தொண்டனரன்மனை தெருவாசல்வந்தின்று

ஜெபாண்டிவாத்தியத்தைத் தானடித்தார்
அதுகேட்டாளம்மை வெண்காட்டுநங்கையுடன்
சந்தனநங்கையுந் தானுமாக
சுத்திவந்தாரம்மை சூழவலம்வந்து
சீர்பாதம்போற்றியென்று தான்பணிந்தாள்
வந்தபொழுதிலே தெண்டனிட்டாளம்மை
வருந்தியேமடத்திலே அமுதுஞ்சொன்னாள்
கண்டபோதிலே தெண்டனிட்டாளம்மை
கடுகியேமடத்திலே அமுதுஞ்சொன்னாள்
உருக்கியநெய்களுடன் பொற்கறியாம்பின்னும்
உளுந்துவடைகளுடன் மாங்கனியும்
கொத்துமாங்கனிபாக் கனியுடனேயமுது
கொள்ளவேமடத்திற்கு வாருமையா
வந்துபணிந்தபொரு வெண்காட்டுநங்கை
வையகவாழ்த்தியே சேர்த்தெடுத்தார்
மங்கிலியம்வாழ்ந்திருப்பாய் மாதாவேதாயே
மகாதேவரருள்பாதம்போற்றிவாழ்வாய்
சந்தானம்வாழ்ந்திருப்பாய் மாதாவேதாயே
சாகாத ஆண்பிள்ளையைப் பெற்றுவாழ்வாய்
நீயுமுன்கணவனும் உன்னுடையசுற்றத்தாரும்
உமைபவரருள்பாதம் போற்றிவாழ்வாய்
நீதானிங்கேவந்து கும்பிட்டாயேதாயே
உன்கண்வனெங்கேயென்று கேட்டாராம்
இறப்பார்பரப்பாராம் ஈசரடியாரை
இட்டுவரப்போனார் அடியர்களை
ஆளனில்லாமனை யிலுண்ணேனம்மாதாயே
அவ்விடத்திலன்னமிட்டால் கொள்ளேனென்றார்
புருஷனில்லாமனையி லுண்ணேனம்மாதாயே
பொற்கலத்திலன்னமிட்டாள் கொள்ளேனென்றார்
தருக்கியேபொன்னிலே தங்கக்கட்டித்தந்தாலும்
தலைவனில்லாமனை தனி லுண்ணேனென்றார்
உருக்கியபொன்னிலே ஒருபடிதந்தாலும்
உளவனில்லாமனை தனிலுண்ணேனென்றார்
எங்கேஎழுந்தருளி யிருப்பீரோவையா
அங்கேவரச்சொல்லுகிறே னும்மடியாரை
கோவில்மதிலோரம் சார்ந்திருப்பேனம்மா
கோலமானதிருஆத்தி அடியிருப்பேன்
அப்படியேநல்லதென்று வெண்காட்டுநங்கைக்
கருளியதிருஆத்தி அடியிற்வந்தார்
திருஆத்திமரத்தைதேடிவந்தாரையா
சிருபுலியாசனத்தை போட்டமர்ந்தார்
ஆத்திமரத்தடியில் வீற்றிருந்தபொழுதிலே

காற்றுமழைகளும் உண்டாக்கி
காற்றுமழைகளும் கடுங்காற்றுடைமின்
கடுகியேமங்களங்கள் சோரிடவே
இலைகள் கருகின்ற திருவையாத்திமரம்
இலைதழைத்தேமரம் நிழலிடுமாம்
பூவாதேநின்றதொரு கயிலாய ஆத்திமரம்
பூத்தல்லோ புட்பமர்ச்சொரிந்திடுமாம
ஒருபக்கம்செண்பகம் பூத்திடுமாமரம்
ஒருபக்கம் பாதிரி பூர்த்திடுமாம்
ஒருபக்கம் மல்லிகைப் பூத்திடுமாம்
அப்படிக்கொற்றதொரு ஆத்திமரத்தண்டை
ஐயர் பரமசிவன் வீற்றிருந்தார்
தேடப்போன அந்தசிறுத்தொண்டதேவனையான்
திகைத்துமயங்கியே மடத்தில்வந்தான்
கத்திதாராய்பெண்ணேநீ கத்திதாராய்யடிப்பெண்ணே
கழுதையறிந்துக்கொள்ள கத்திதாராய்
ஒற்றியூர் சிற்றம்பலம் ஓடினேன்தேடினேன்
அங்கேயொருசங்கமரைக் கண்டதில்லை
குற்றாலங்குறனுடு ஓடினேன் தேடினேன்
குருபரனைவரைக் கண்டதில்லை
வண்ணாரப்பெண்ணுக்காக மணம்புகுந்தாரையர்
அண்ணாமலைப்பழனி ஓடினேன் தேடினேன்
அங்கே யொரு சங்கமரை கண்டதில்லை
கழுக்கள்வலமாய்வந்து நயினாரை பூசிக்கும்
திருக்கழுக்குன்றபதி தேடிவந்தேன்
திருக்கழுக்குன்றபதி ஓடினேன் தேடினேன்
சிவபூசை செய்வாரைக்கண்டதில்லை
குளங்கள்குளக்கரைகள் ஓடினேன்தேடினேன்
குருபரனைவரைக் கண்டதில்லை
மடங்கள் மடப்பள்ளிகள் ஓடினேன் தேடினேன்
ஒருமகாதேவரையுங் கண்டதில்லை
ஆயிரஞ்சங்கமருக் கமுதளிப்போம்பெண்ணே
அவர்கள்வைத்தபரிகலத்தை யடியேன்கொள்வேண்
இன்றைக்கொருசங்கமரும் வாராமற்போனது
ஈஸ்வரனார்தம்முடைய செயலிதுவோ
விரதங்கள்முடியாமல் போச்சுதேயானால்
விடுவேனேயென்னுடைய வுயிரையென்றார்
கத்திதாராய்பெண்ணேநீ கத்திதாராய்பெண்ணே
கழுத்தையறிந்துக்கொள்ள கத்திதாராய்
கத்திமேன்கேழ்க்கிறீர் அனபனேபத்தா
கருமபலன்சள் தன்னை தேடுகின்றீர்
மஞ்சாறுபெருகியே பொய்கையிலேபண்ண

மடுவிலேமடைந்தசெந் தாமரைப்போல்
அஞ்சாமல்முகங்குளிர்ந் திருந்தாயேபெண்ணே
வந்தாருண்டோ திருப்போரூர் மடந்தனிலே
வந்தாருண்டன்பனே வாந்தாருண்டொருவர்
மகாதேவர்தன்னைப்போல் வந்தாருண்டு
வந்ததொருசங்கமரை வெங்கையோ போகவிட்டு
வாழ்ந்தவலக்காரமோ பேசுகிறாய்
என்தாரமென்றல்லோ நானிருந்தேன்பெண்ணே
பிறர்தாரமானதை நானறியேன்
வீட்டிலில்லாளென்றல்லோ நானிருந்தேன்பெண்ணே
வேசிபாளானதை நானறியேன்
சிவனடியாளென்றல்லோ நானிருந்தேன்பெண்ணே
சிவத்துரோகியானதை நானறியேன்
உன்தாரமென்பதற்கு ஒருகுறைவுமில்லை
உத்தமரேயொன்றுசொல்லக் கேளுமென்றாள்
பள்ளியிற்படிக்கிற சீராளன்தன்னை
பதாராதேவொருவார்த்தை சொல்லுகிறேன்
வந்தார்வந்தாரொரு சங்கமனார்வந்தார்
மகாதேவர்தன்னைப்போல வந்தாரையா
அவ்வொருவர்க்கமுதுநாம் கொடுப்போமேயானால்
ஒருகோடிசங்கமர்க்கு ஒவ்வுமென்றாள்
அவரேநமதுவீட்டில் அமுதுண்பாராமானால்
ஆயிரஞ்சங்கமர்க்கு ஒவ்வுமென்றாள்
அவரைக்கண்டபொழுதில் தெண்டனிட்டேயடியேன்
கடுகியேமடத்திலே யமுதுசொன்னேன்
வந்தபொழுதிலே தெண்டனிட்டேனடியேன்
வருந்தியேமடத்திலே யமுதுசொன்னேன்
ஆளனில்லாமடந்தனி லுண்ணோமென்றுரைப்பர்
அவ்விடத்தி லன்னமிட்டால் கொள்ளோமென்றார்
கோவில்மதிலோரஞ் சேர்ந்திருப்பேனென்றார்
கோலமானதிரு வாத்தியடிதனிலே
ஆத்திமரத்தடியில் வீற்றிருப்போமென்றார்
அன்பனார்வந்தாலங்கே வரவேசொன்னார்
காலத்தாலுலைகட்டி சமையடி பெண்ணேநீ
கடுகியேசங்கமரைக் கொண்டுவாரேன்

சிறுத்தொண்டபத்தன் சங்கமவேஷம்பூண்ட சுவாமியைத்தேடப்போகிறது.

ஒருசுற்றுவேஷ்ட்டியும் தரித்தாராமன்பர்
ஒருபக்கம்பூநூலை போடுவாராம்
திருவெண்ணீறைக்கெழுத்தையோ துவரணைந்தொண்டன்
திருக்கொண்றைமாலையொன்று போடுவாராம

திருக்கொன்றைமாலையொன்றுமார்பிலசைந்தாட
  திருவாத்திதிசைநோக்கி நடப்பாராம்
திருவாத்திமரந்தன்னில் தேடிவந்துபத்தன்
  தெண்டநமஸ்காரஞ் செய்வானும்
ஆதியேவுன்பாதம் போற்றிபோற்றிசிவனே
  அம்பலவாணனாரே போற்றிஐயா
சோதியேவுன்பாதம் போற்றிசிவனே
  சிதம்பரதேவனாரே போற்றிஐயா
திருக்கொன்றைமாலையொன்று மார்பிலசைந்தாட
  திருவாத்திசைநோக்கி நடப்பாராம்
திருவாத்திமரந்தன்னை தேடிவந்துபத்தன்
  தெண்டநமஸ்காரஞ் செய்குவானும்

சிவவேடர்பூண்ட பண்டாரத்தை

சிறுத்தொண்டபத்தன் காணுதல்

ஆதியேவுன்பாதம் போற்றிபோற்றிசிவனே
  அம்பலவாணனாரே போற்றிஐயா
சோதியேவுன்பாதம் போற்றிபோற்றிசிவனே
  சிதம்பரதேவனாரே போற்றிஐயா
ஆதியேவமுதுண்ண வாருமையாசிவனே
  அரனாரேவமுதுண்ண எழுந்தருளும்தேவா
சோதியேயமுதுண்ண எழுந்தருளும்தேவா
  சிதம்பரதேவனாரே வாருமையா
போற்றியிடுகிற சத்தந்தன்னைகேட்டு
  புலிமுகவாணனார் முகம்பார்த்தார்
அழுதகள்ளாதொழுதகள்ளா யெழுந்திரடாபத்தா
  ஆசாரக்கள்ளனாமே எழுந்திரடா
கும்பிடுங்கள்ளாநீ எழுந்திரும்பத்தா
  குழைத்திடுங்கள்ளாநீ யெழுந்திரும்பத்தா
  அன்புள்ளகள்ளாநீ யெழுந்திரும்பத்தா
ஆசாரமுள்ளவனே யெழுந்திரடா
  உன்னைதானே சிறுத்தொண்டனென்பது
உலகமெல்லாம்பெரிய வார்த்தையானதுவும்
  ஆமாங்காணுமாங்காண் தம்பிரானேசிவனே
அகத்துக்கருமப்படி யடியேனென்றான்
  அமுதுக்கழைக்கவந்த சிறுத்தொண்டபத்தாநீ
அகத்திலேயென்ன கறி சமைத்தாயோடா
விரும்பியழைக்கிறாயே சிறுத்தொண்டபத்தாநீ
  விட்டிலேயென்ன கறி சமைத்தாயோடா
மண்டலத்தில்மனிதர்கள் வழங்கும் கறிவகை
  மண்டலத்தில்சமைத்திருக்கும் சாமியென்றான்
இச்சையானகறிவகை இவ்வுலகிலுண்டானோர்

பேதேதோபலவகை பொசித்திடுவார்
உந்தன்மடந்தனிலே சமைக்குங் கறிவகை
உறுதியாகவேநீதான் சொல்லுமென்றார்
ஆனாலுரைக்கிறேன் தம்பிரானேசிவனே
அறியவே கறிவகை சொல்லுகிறேன்

சிறுத்தொண்டபத்தன் சிவவேடம்பூண்ட
பண்டாரத்துக்கு பதார்த்தவகை சொல்லல்

பூசினிக்காய்கறி சமைத்திருக்கும்மடத்தில்
புடலங்காய்க்கறிவகை சமைத்திருக்கும்
பாவற்காய் கறிவகை சமைத்திருக்குமசாமி
பபத்தங்காய்பொறிக் கறி செய்திருக்கும்
வாழக்காய் கறிவகைசமைத்திருக்குப்சுவாமி
வழுதலங்காய்பச்சடி செய்திருக்கும்
பீர்க்கங்காய் கறிவகை சமைத்திருக்கும்சுவாமி
துவட்டல் செய்தவரைக்காய் பொறித்திருக்கும்
இத்தனை கறிவகைகள் எந்தன்மடத்திலே
இப்போதுசமைத்திருக்கும்வாருமையா
போதும்போதும்சிறுத்தொண்டா சொன்ன கறிவகை
பொல்லாதவிதங்களைச் சொன்னாபோடா
பூசினிக்காயாவதும் அன்பனேகேளும்
அய்யருடதிருத்தொப்பை வயிறல்லோ
புடலங்காயாவது அன்பனேகேளும்
அய்யருடபேரான சடையல்லவோ
முருங்கக்காயாவது சிறுதொண்டபத்தா
அய்யருடஉச்சிசடை தானல்லவோ
பாவற்காயானதவும் அன்பனேகேளும்
ஐயருடருத்திராக்ஷ மாலையடா
அவரைக்காய்கறி பொரித்தேனென்றாப்பத்தா
ஐயருடபத்துவிரல் நகமல்லவோ
சுறைக்காய்கூட்டமுது செய்தேனென்றாப்பத்தா
ஐயருடகமண்டலம் தானல்லவோ
பீர்க்கங்காயாவது அன்பனேசேளும்
ஐயருடவிபூதிபை தானல்லவோ
கத்தரிக்காயாவது அன்பனேகேளும்
ஐயரிடதிருபூசைமணி தானல்லவோ
வாழைக்காயாவதும் அன்பனேகேளும்
ஐயரிடதிருநெற்றி சமைத்தாயோடா
நன்றாச்சுநன்றாய்ச்சு சிறுத்தொனடபத்தா
நல்லவிதகறிகள் சொன்னாயோடா
என்னையறுத்துபத்தா யென்க்குமேயுட்டுநீ
என்னையும்கொல்லவகை பார்த்தாயோடா
இத்தனைகறிவகை சமைத்துநன்றாகவேதான்

எத்தனைபரதேசியைக் கொன்றாயோடா
தன்னையறுத்துத்தவ முணர்ந்தமகத்துகளோர்
தானறிந்தாரிந்த கறிவகைகள்
இதெல்லாம்வேண்டாமற் போனாலுமையரே
இன்னமொருவிதங்களைச் சொல்லுமென்றார்
ஆட்டிலொருகோடி தான்பொறிப்பேன்
மாட்டிலொருகோடி நான்பறிப்பேன்
பாலுண்டுபழமுண்டு பண்டாரசிவமே
பசியாறிப்போகவல்லோ வாருமென்றேன்
ஆட்டைத்தான்கொல்லுகிறஅரும்பாவிமனையிலே
அறியாதேயமுன்னை வந்தேனென்றார்
மாட்டைதான்கொள்கிற மாபாவியிடத்திலே
மத்தியானவிருந்துக்கு வந்தேனென்றார்
ஆட்டையுங்கொல்வதில்லை மாட்டையுங்கொல்வதில்லை
ஆவும்பசுக்களையும் நானறியேன்
புல்லைத்தின்றுமது நீரைக்குடித்தல்லவோ
போதஸ்தனங்கள் தன்னைசெரண்டாடும்
அல்லல்படாமலே மேய்ந்துவந்தொடுங்கும்
ஆவும்பசுக்களையும் நானறியேன்
காட்டுமாங்கனிகளும் கொத்துபாங்கனிகளும்
சக்கரைகற்கண்டு பலாக்கனியும்
பாலுண்டுபழமுண்டு தம்பிரானேசிவனே
பசியாறிப்போகவல்லோ வாருமையா
பாலும்பழமெனக்கு வேண்டாமடாபத்தா
பந்துஜெனமுண்டோ பத்தாயிவ்வூரிலே
பிச்சையானகறிவகை பத்தனரேயின்னம்
எடுத்துரைத்தால் வருவேனென்றார்
சிவவேடம்பூண்ட பரமசிவன் சிறுத்தொண்டபத்தனை

பிள்ளைகறிக் கேட்பது

உனக்கும்நமக்கும் நலம்பெறவேணுமென்றால்
இளமனிதன்கறி வேணுமென்றார்
நான்சொன்னபடி காப்பாயோபத்தா
அறிவுடன்நினைவாய் நீகேட்பாயோடா
ஒருத்தாய்க்கொருபிள்ளை யாகவேணுமோடா
உண்மையானபாலகனைப் வேணுமோடா
தாய்க்குத்தலைமகனாய் வேணுமோடா
தான்பெற்றபாலகனாய் வேணுமோடா
வயதிலேஅஞ்சாக வேணுமோடா
வம்மிஷபதியோனு வேணுமோடா
குடிக்குவொருவனாக வேணுமோடாபத்தா
கிளைக்குமொருவனாய் வேண்டுமோடா
சாலையிலேநாலுவேதம் ஓதவேண்டும்பத்தா

சீராளதேவனைதயை வேண்டுமடா
இப்படிக்கொத்தபிள்ளை இருந்தேயுண்டானால்
இக்ஷணமுன்னவே வருவேனென்றார்
தம்பிரான்சொல்லைக்கேட்டு சிறுத்தொண்டபத்தன்.
தவக்குறைவாராமல் ஏதுசொல்வான்
அப்படிக்கொத்தபிள்ளை அடியேன் தருகிறேன்
அரனாரேசெய்யும்வகை சொல்லுமென்றான்
உச்சிதமாகவே உடனேபள்ளிற்சென்று
உண்ணுவகையாய்பிள்ளையையழைத்துவந்து
மஞ்சள்நீர்சாலையிலே வசந்தநீர்பாலித்து
மாதாமடியில்வைத்து திலரதமிட்டு
பொட்டிட்டுமையிட்டு தாயார்கரத்தாலே
பொன்தொட்டிலிலே தாவளர்த்தி
தாலாட்டிபிள்ளைதனை தாயார்த்தாலே
தங்கப்பலகையினில் தானமர்த்தி
தாயரும்காலை பிடிக்கவேண்டும்பத்தா
பெற்றதகப்பனார்கழுத்தை யறுக்கவேண்டும்
கழுத்தையறுத்து சுழன்றவுதிரத்தை
கறிசட்டிதன்னில்வேறே வாங்கவேண்டும்
உரலிலேதலைபோட்டு துவைக்கும்வேண்டும்பத்தா
உருப்பானமூளைபத்தும் வாங்கவேண்டும்
கண்ணுககறிகள்வேறே பொறிக்கவேண்டும்பத்தா
கலேக்கறிகள்வேறே சமைக்கவேண்டும்
பதினொருவிதமாக தலைக்கறிதன்னிலே
பக்குவமாக சமைக்கவேண்டும்
அறுத்தமுண்டந்தனை குளிப்பாட்டி தாயார்
குழிதாளிசட்டியில்வைத்து அவிக்கவேண்டும்
அவித்தமுண்டந்தன்னை பெற்றதாயாரெடுத்து
அறிவாமணையில்வைத்து அறியவேண்டும்
ஈரல்பிளந்துவேறே சமைக்கவேண்டும்பிறகு
பிறச்சிவிதவிதமாய் பொரிக்கவேண்டும்
நெஞ்சிகிணைக்குடல் வாங்கவேண்டும்பத்தா
நிணக்குடலொருசட்டி சமைக்கவேண்டும்
பொன்பூண்டமரர்பையும் செஞ்சாங்குடலையும்
பொர்றிக்கறியாகவே சமைக்கவேண்டும்
முழங்காலெலும்புகள் முள்ளெலும்புகளும்
முளகுநீராகவே செய்யவேண்டும்
கணுக்காலெலும்புகள் காலெலும்புகளெல்லாம்
கழுகழுவர்னமாகப் பொரிக்கவேண்டும்
பாடகமிட்டிருந்த கணுக்காலிரண்டையும்
பட்டாடைமேலேவைத்து தரிக்கவேண்டும்
மோதிரமிட்டிருந்த முனைவிரல்பத்தையும்
முழுமுழுவர்னமாகப் பொரிக்கவேண்டும்

பேரானபெருந்துடைசதைகள் வகுந்தல்லோ
பொன்போல்பொரித்தெடுத்து சமைக்கவேண்டும்
மார்புசதைகள்வேறே பொரிக்கவேண்டும்பத்தா
வலதுதுடைகள்வேறே பொரிக்கவேணும்
ஆறுபொரியதும் அவிட்டலும் துவட்டலும்
பணியாரவிதத்துடன் பவுசுகையும்
எண்ணியெண்ணியொரு இருபத்தொருவிதமாக
பலவிதக்கறிகள் சமைக்கவேண்டும்
பலபலக்கறிகள்சமைக்க வேண்டும்பத்தா
மூணுபண்டம்வேறேசாதம் சமைக்கவேண்டும்
இப்படி கருதேடி படைப்பார்களெங்கள்
சித்திரபுவியுள்ள மனிதரெல்லாம்
பெற்றபோதுண்டான சந்தோஷம்போல
பிள்ளையை அழைக்க வேணுமடா
அழைக்கும்போதுண்டான சந்தோஷம்போல
பிள்ளையை அறுக்கும்போ துண்டாகவேணுமடா
அறுக்கும்போதுண்டான சந்தோஷம்போல
அவிக்கும்போதுண்டாக வேணுமடா
அவிக்கும்பேதுண்டான சந்தோஷம்போல
அரியும்போதுண்டாக வேண்டுமடா
அரியும்போதுண்டான சந்தோஷம்போல
கறிசமைக்கும்போதுண்டாக வேணுமடா
சமைக்கும்போதுண்டான சந்தோஷம்போல
அழைக்கும்போதுண்டாக வேண்டுமடா
அழைக்கும்போதுண்டான சந்தோஷம்போல
அமுதுபடைக்கும்போ துண்டாகவேண்டுமடா
அமுதுகறியுமாக நிறவுமளவிலே
தமிழுங்கிரந்தமுமாய் மணக்கவேண்டுமுந்தன்
தையல்நல்லாள்சம்பதிக்க வேண்டுமடா
அப்படிக்குகறிதேடி படைக்கிறேன்சுவாமி
அடியனார் மடத்துக்கு வாருமையா
காலங்கலிகாலங் கெட்டகாலம்பத்தா
கடன்சொன்னவார்த்தையை மறக்குங்காலம்
தம்பிக்குத்தமயன் பகையாளிபெற்ற
தானேபெரியவன் கோலமாகி
காடுசிறுத்தல்லோ நாடுபெருத்து
கடுகியேவருகிற கலியுகமாம்
குருவிருந்த ஆசனத்தில் சிஷனிருந்து
கூறுங்கலியுரைக்கும் கொடியகாலம்
கொடுத்தகடன்கேட்பாரை கொல்லும்காலம்பத்தா
கூசாமல்பெரியோரை வையுங்காலம்
பெற்றதாய்புத்திசொன்ன உதைக்குங்காலங்கொண்ட

பெண்சாதிமயிர்பிடித்தால் பொறக்குங்காலம்
கற்றவரைக்கல்லா தெரியுங்காலம்பத்தா
காலாதிகலியுக காலங்கானே
பிள்ளைக்கறியுஞ்சோறும் போடுகிறேனென்று
போதவேயெமக்குநீர் தாரைவாரும்
தண்ணியள்ளியெந்தனுக்கு தாரைவார்ப்பீரானால்
வருவதுமெய்பாகும் அன்பனே
சத்தியம்பிரமாணிக்கம் செய்யவேண்டுமோசுவாமி
ஓமென்றசொல்லுமக்குப்போதாதோ
அய்யாகைதிருச்சங்கு செபகணடிவாங்கி
காவேரிசலந்தன்னைக்கொண்டுவந்தார்
ஐயர்கைதாழவுமாய் அன்பன்கைமேலுமாய
அள்ளியெமக்குநீர் தாரைவாரும்
ஐயர்கைமேலுமாய் அன்பன்கைதாழவுமாய்
அள்ளியேவிபூதிதானளித்தார்
உச்சிக்குமுன்னாலே அமுதுபடைப்பேனென்று
சத்தியமாய்முகந்துநீர் தாரைவார்த்தால்
உச்சியலோரடி தவழ்ந்ததேயுண்டானால்
உண்ணேனேடா உன்னிடமலாயிடத்தில்
உச்சிக்குமுன்னாலே அமுதுபடைப்பேனென்று
சத்தியமாய்முகந்துநீர் தாரைவார்த்தால்
முக்காலும்முகந்துநீர் வார்த்தசிறுத்தொண்டன்
நடந்தானேதிருமடந் தனைநோக்கி
வேண்டிமடத்துக்கு நடக்குமளவிலே
வேறேகிலேசங்களை மனதிலெண்ணான்
பெண்சாதிவெண்காட்டாள் மனதறியாமலே
பிள்ளைக்கறியுஞ்சோறும் சொல்லிவைத்தேன்
மனையாட்டிவெண்காட்டாள் மனதறியாமலே
மைந்தன்கறியுஞ்சோறும் சொல்லிவைத்தேன்
பெற்றவருத்தந்தன்னை பார்ப்பாளோஅவள்
பிள்ளைதன்னைநானறியே னென்பாளோதான்
வளர்த்தஅருமைதன்னை பார்ப்பாளோதான்
அவள்மைந்தனைநானறியே னென்பாளோதான்
அடிகெட்டேன்பிடிகெட்டேன் என்பாளேதான்
அசலார்கள்சொற்பேச்சை கேழ்ப்பாளோதான்
எடுத்ததவக்குறைக ளின்றைக்குப்பொய்யானா
லிக்ஷணமேவுயிரை விடுவோமென்று
மனதில்கிலேசமெண்ணி வருகிறவழிதனில்
வந்தமர்ந்தார்விக்கின விநாயகரும்
தொப்பையும்முப்புரிநூ லிலங்கிவரஅவர்
தும்பிக்கையிருபுரங் குலுங்கிவர
சங்கு சக்கரம் சதுர்புசமீதிலங்க
தோளில்தரித்தமது வண்டிலங்க

திங்களிலங்கத் திருநடனமிலங்கிட
 செஞ்சிலம்போசைநின்று குலுங்கிட
வந்தமனதார சிறுத்தொண்டன வரும்வழி
 வழங்கும்பிரார்த்தனைகள் செய்வாரென்றே
கண்டானேசிறுத்தொண்டன் பிள்ளையார்கோயிலில்
 என்கலிகள்குறைதீர்க்க வந்தவரே
முக்கால்வலம்வந்து மூணுகுட்டுகுட்டி
 மூஷிகவாகனரே தஞ்சமைய
என்பெண்சாதிமனது என்மனதுபோலானால்
 பொற்குடங்கவிழ்க்குறேன் பிள்ளையாரே
பெகுடங்கவிழ்ச்குறேன் பிள்ளையாரேஉனக்கு
 போதப்பெரியவல் படைத்திடுவேன்
கூறையால்கட்டிருந்த பிள்ளையார் கோவில்தன்னை
 கல்லாலேகட்டிவைப்பேன் பிள்ளையாரே
கல்லாலேகட்டிவைத்த பிள்ளையார்கோவில்
 செம்பாலேகட்டிவைப்பேன் பிள்ளையாரே
செம்பாலேகட்டிவைத்த பிள்ளையார்கோவில்
 தங்கத்தால்கட்டிவைப்பேன் பிள்ளையாரே
தங்கத்தினலிழைத்த பிள்ளையாரகோவில்
 மாணிக்கத்தாலிழைப்பேன் பிள்ளையாரே
சாலக்கின்னியபாலக்கின்னி பதித்திடுவேனுமக்கு
 தையனல்லாள்சம்மதிக்க வேணுமையா
பொற்குடங்கவிழ்க்குறேன் பிள்ளையாரேவுமக்கு
 என்பெண்சாதிசம்மதிக்க வேணுமையா
இப்படிக்காகவே பிள்ளையாரைவேண்டி
 வெண்காட்டுநங்கைதன்னை மிகவருந்தி
திரும்பிவருகையில் சிறுத்தொண்டபத்தன்
 திருவெண்காட்டுநங்கை மனதிலெண்ணுன்
தம்பிரானைத்தேடிப்போன அன்பரைக்காணேமென்று
 தானுமேதேடியே வருகலுற்றுள்
வேண்டிமடத்துக்கினி ன்டக்குமளவில்.
 வெண்காட்டுநங்கையம்மா ளெதிரேவந்தாள்
கண்டாண்சிறுத்தொண்டன் வெண்காட்டுநங்கையை
 கைதொழுதாளம்மன் கணவன்முன்னே
பொற்றும்பைக்கிளி போடுவாணும்பத்தன்
 பொற்றுரும்பாகமதை சோதிப்பானும்
பொனனனமேனியெல்லாம் புழுதிபுடர்ந்ததென்று
 பொய்சொல்லிமெய்யாகத் துடைப்பானும்
தாலிசரட்டைமெல்லத் தடவுவாணும்பத்தன்
 தலைமேல்துரும்பைக்கையா லெடுப்பானும்
கணவன்மாரிசங்களைக் கண்டல்லோவெண்காட்டாள்
 சலுக்கென்றெடுத்துமவ ளேதுசொல்வாள்

அஞ்சுபிராயத்தில் கையுந்தந்தேன்பத்தா
ஆயிரமபெருந்தெருவு வலமாய்வந்தேன்
சின்னவயதினில் கைத்தந்தேடினடியேன்
சீராளதேவனையும் பெற்றெடுத்தேன்
பாலகன்சீராளன் பிறந்துசமர்த்தினாய்
பள்ளிக்குள்விசித்திரனாய் தான்வளர்ந்தான்
இதுநடுவிலிதுவளவில்லாதகாரியம்
எத்தவந்தகாரியங்களேதோவென்றாள்
உன்னாலேயென்னாலே முடியாது
முடியாதுகாரிங்கள் முடியாதுபத்தா
முளையில்லாப்பயிரது விளையாது
இடியிடித்தால்மழை பொழியார்நாட்டிலே
யெழுதாதசித்திரங்களுலகிலுண்டோ
கட்டியடியாத கள்ளனுண்டோபத்தா
கலங்கித்தெளியாத தண்ணீருண்டோ
நாரையறியாதகுளமுண்டோபத்தா
நமனையறியாம லுயிர்போமோ
என்னையறியாத காரிங்கள்வேருண்டோ
யேத்தவந்தகாரிங்கள் சொல்லுமென்றான்
தம்பிரான்சொன்னசொல்லை கேட்டையானால்பெண்ணே
சலிப்பாகவே விழுந்தழுவாயடி
மறப்பாயேமறந் திருப்பாயேபெண்ணே
வரத்தால்செய்தவொரு தவத்தாலே
பெற்றவருத்தந்தன்னை பார்ப்பாயோபெண்ணே
மைந்தன்தன்னைநானறியே னென்பாயோ
வளர்த்தாருமைதன்னை பார்ப்பாயோபெண்ணே
பிள்ளைதன்னைநானறியே னென்பாயோடி
அடிகெட்டேன்பிடிகெட்டே னென்பாயோபெண்ணே
அசலார்களபோல்வார்த்தை கேழ்ப்பாயோடி
அப்படிக்கொருநாளும் வருவதில்லைதேவா
ஐயர்சொன்னவார்த்தையை சொல்லுமென்றாள்
பிள்ளைகரியுஞ்சோறும் போடுகிறேனென்று
பொருந்திவந்தேன் வெண்காட்டுநங்கைபென்றான்
மைந்தன்கறியுஞ்சோறும்பொடுகிறேனென்று
வருந்திவந்தேன் திருவெண்காட்டுநங்கையென்றான்
வி[illegible]கவரத்தாலே நமக்கென்னகாரியும்
இதுவொருபெரிதாகச் சொல்லவந்தாய்
விட்டகுறைவந்தாத் விதியின்பயனல்ல
வேறொருகாரியங்களெண்ணப்போமோ
நடவன் அருக்கின்ற பருவங்கள்வந்தாலே
நருபோகம்சரிபோகம் தானல்லவோ
பிள்ளைக்கரியுஞ்சோறும் போடுகிறேனென்று
பொய்யர்தவரந்தன்னை நிலைநிறுத்தும்

இன்னமிவள் மனதை சோதிப்போமென்று
  மென்னசொல்லுவான்சிறுத்தொண்டன்
பொன்னைபொருளைக்கொஞ்சம் தருவீரேயோடி
  பூமியிலேபுத்திரனை கொண்டுவாறேன்
காசுபணத்தைக்கொஞ்சம் தருவாயோடிபெண்ணே
  கண்ணறியாபாலகனைக் கொண்டுவாறேன்
தேடிதிரவியந் தாராயோபெண்ணே
  சிறுபிள்ளையாராய்ந்துக் கொண்டுவாரேன்
பொன்னைப்பொருளைத்தான் தந்தாலுமன்பா
  பூமியிற்புத்திரனை தருவாருண்டோ
காசுபணத்தைத்த ன் தந்தாலுமன்பா
  கண்ணறியாப்பாலகனைத் தருவாருண்டோ
அப்படியேயல்லவென்று தந்தாலுமன்பரே
  பிள்ளையை அறுத்துக்கறிசமைக்க தருவாருண்டோ
அறுத்துகறிசமைக்கத் தந்தாலுமன்பா
  அடியார்க்கு அன்புடனே படைப்பாருண்டோ
தோட்டத்துமரக்கறி இங்கிருக்கபத்தா
  தெருவெங்குந்தேடியே போவாருண்டோ
அகத்துமரக்கறி யிங்கியிருக்கபத்தா
  அங்காடிகறிதேடிபே வாருண்டோ
நங்கையடிகறிக ளிங்கிருக்க
  நாட்டிலேகறிதேடி போவாருண்டோ
தோட்டத்துமரக்கறி யாவதுபெண்ணே
  சொன்னரேஉடற்கூராகதென்றார்
அகற்றுமரக்கறி யாவதும்பெண்ணே
  ஐருடகூ ராகதென்றார்
தோட்டத்துமரக்கறி யாவதுந்தான்
  நமக்குநம்மிடபிள்ளைசீராளன்தான்
நங்கைபடிக்கறிக ளாவதுமன்பா
  நமக்குநம்மிடபிள்ளை சீராளன்தான்
நாம்பெற்றபிள்ளை நாமேயறுத்துவிட்டால்
  நமக்கேதவங்கள்வந்துசேருமென்றாள்
பத்திரமிம்முக்கணையு மெடுத்துக்கட்டிபிள்ளை
  பள்ளிகருதோழன்பிள்ளை கடைசூழ்ந்தான்
இப்போஉண்டியிப்போ போனதம்பிசீராளான்
  என்சொல்லி ானழைப்பேன் பெண்ணே யென்றான்
அறுக்கப்பொருந்திவத அன்பனுரேதொண்டர்
  அழைக்கமதிகள்சற்று மறியாயோ
அச்சுடர்வனந்துக் குளிருந்துவுங்கள்
  எம்மான்மார்வந்தாரென் றெனவழையும்
அம்மான்வந்தாரென் றென்வழையும்பத்தா
  அதிசயமென்னகொண்டு வந்தாரென்பான்
பொன்பெரியபுத்தகங்கள் கொண்டுவந்தாரென்று

பொன்னூலெழுத்தாணி கொண்டுவந்தார்
நீலக்கண்ணாடிகள் கொண்டுவந்தாரென்று
கோலச்சித்தாடைகள் கொண்டுவந்தாரென்று
தேமாங்கனிப்பழங் கொண்டுவந்தார்
திருநீற்றுவுண்டைபழங் கொண்டுவந்தார்
இத்தனை பணிவகைச் சித்தாகச்சொல்லி
எத்தியழைத்தேநீர்வாருமென்றாள்
திருமதுரைப்பள்ளிச் சிறுத்தொண்டபத்தன்
சீராளனையழைக்க தானடந்தார்
ஆத்திமரத்தடியில் வீற்றிருக்குஞ்சாமி
அறியாதகுழந்தைமனஞ் சோதிப்பாராம்
அங்குமொருசீராளன் மனமறியவென்று
அனுப்பினார்நித்திரா தேவிதன்னை
நித்திராதேவிவந்து நினைவைகுலைக்கின்றாள்
நீங்காதசரஸ்வதி விலக்கிடவே
சிந்தைகலங்கிபிள்ளை சீராளதேவனும்
சீக்கிரத்தில்வாத்தியாரைதெண்டம்பண்ணான்
ஒருநாளும்வாராத நித்திரைகள்சுவாமி
உண்டாகியரிவு மறியுதையா
காலப்பொழுதில்பாலன்னம் பொசித்தல்லோ
காலங்கள்வேறுபட வந்ததினால்
மயக்கங்கள்வந்தாலே சீராளதேவனே
மைந்தாதோழன்மடியில் பள்ளிக்கொள்ளும்
பள்ளிக்குபடிக்கின்ற தோழர்மடியிலே
பாலன்சீராளன் நித்திரைசெய்தான்
நித்திரைமயக்கத்திலே பொல்லாதசொற்பனம்
நிண்ணயப்படியாகக்கண்டுவிட்டான்
அல்லல்கனவுகண்டுசீராளதேவனும்
அலரிபுலம்பியல்லோ தானெழுந்தான்
பொல்லாதகினவுகண்டு சீராளதேவனும்
புலமபியலரியல்லோ தானெழுந்தான்
கண்ணீர்ததும்பியொரு காலரடுங்கமனம்
கைசோரமெய்சோர கலைநிகழ
தூங்கியெழுந்திருந்த சீராளதேவனும்
குருசுடன்வாத்தியாரை சரணம்பண்ணான்
இன்னாளும்நித்திரைசெய்தால் தம்பிசீராளா
யிலங்கும்செந்தாமரைப்போல் முகமிருக்கும்
முகம்வாடலப்பட்டதொரு காரணமதுவெண்ண
புயங்கள் துடிக்கவந்த விதங்களென்ன
தூங்கினேன்பிள்ளைநான் கண்டகனவெல்லாம்
திடுக்கென்றார்போல தந்தோந்தோணுதையா
என்னென்னசொற்பனங் கண்டாயோ அப்பா
யென்னோடேயொளியாதே சொல்லுமென்றார்

ஆறுபெருகக்கனா கண்டாயோதம்பி
அரசயிலைவிற்கக்கனா கண்டயோடா
ஏரிபெருகக்கனா கண்டாயோடா தம்பி
எருக்கயிலைவிற்கக்கனா கண்டயோடா தம்பி
குளங்கள் நிரையக்கனா கண்டதில்லை
கொட்டிமுளைக்கக்கனா கண்டதில்லை
தாயார்க்கொருகுறைகள் கண்டதில்லைசுவாமி
தாய்தகப்பனுக்கொரு தோஷங்கண்டதில்லை
ஊருக்கொருகுறைகள் கண்டதில்லை
உந்தனுக்கொரு தோஷங்கண்டதில்லை
உன்னோடேநான்போகக்கண்டகனவை
எனக்கென்னகுறியுமே நானறியேன்
கன்னிகையாகவே கலியுகந்தனிலே
கனமாயெடுத்து அப்பன்றோளில்வைத்து
என்னையெடுத்துஅப்பன் தோளின்மேல்வைத்து
எழில்பொரியமாளிகைக்கு கொண்டுசென்றார்
எங்கள்மாதாபுலம்பிவந்து எதிராகவாங்கி
மடிதன்னில்வைத்துப்பால் கொடுக்கக்கண்டேன்
மடியிலிருந்தொரு மைந்தனைக்கொண்டுசென்று
மாணிக்கத்தொட்டிலிலே வளர்த்தக்கண்டேன்
காம்பரிந்தஜுகலப்பூ மல்லிகைமெத்தையின்மேல்
கைகளெல்லாம் மடக்கியென்னை வளர்த்தக்கண்டேன்
சந்தனநங்கையென்றுந் தாசிஒருபுரம்
தாயாரொருபுரந் தாலாட்டக்கண்டேன்
தாலாட்டும்பிள்ளையைத் தாயாரெடுத்தல்லவோ
தங்கப்பொற்பலகையி லிருத்தக்கண்டேன்
தாயாருங்கைகால் பிடிக்கக்கண்டேன்பெற்ற
தகப்பனார் என்கழுத்தை யறுக்கக்கண்டேன்
கழுத்தையறுத்தயதில் கழன்றவுதிரத்தை
கறிசட்டிதனிலேவேறே வவுக்கக்கண்டேன்
உலரஉலர வவுத்ததைநெய்தனில்
உதிரம்பொரியல்வேறே சமைக்ககண்டேன்
உரலிலேதலைபோட்டு துவைக்கக்கண்டேன்ஐயா
உறுப்பானமூளைப்பத்தும் வாங்கக்கண்டேன்
கண்ணுக்கறிவேறே சமைக்கக்கண்டேன்
காதுக்கறிகள்வேறேபொறிக்கக்கண்டேன்
மூக்குகறிகள்வேறேசமைக்கக்கண்டேன்
நாக்குகறிகள்வேறே சமைக்கக்கண்டேன்
பதினொருவிதமாக தலைக்கறியானதை
பாங்குடனேவேறேதாதிசமைக்கண்டேன்
அறுத்துமுண்டந்தனைக் குளிப்பாட்டித்தாயார்
குழிகாளில் தன்னில்வைத்து அவிக்கக்கண்டேன்
கொர்த்தியகறிதன்னை யிருதாளில்வைத்து

குலுங்கவே தீமூட்டி அவிக்கக்கண்டேன்
அவித்தமுண்டந்தன்னை யிறக்கியே தாயார்
அருவாமனையில்வைத்து அறியக்கண்டேன்
ஈரல்பிளந்துசமைக்கக் கண்டேன் சுவாமி
இறைச்சிகள் விதவிதமாய் பொறிக்கண்டேன்
பக்கத்தெலும்புகள் பழுவேலும்பானதை
பதைக்கபதைக்கபிடித்துத் நறுக்கண்டேன்
நெஞ்சடிநிணக்குடல்வேறேசட்டி வாங்கக்கண்டேன்
நிணக்குடல்வேறேசட்டி சமைக்கக்கண்டேன்
பொன்பூண்டமார்பையும் நெஞ்சாங்குடலையும
பொறிக்கறியாகவே சமைககக்கண்டேன்
பாடகமிட்டிருந்த கணுக்காலுமட்டிலே
பட்டாடை மேலேவைத்து தரிக்கக்கண்டேன்
மோதிரமிட்டிருந்த முனைவிரல்பதனையும்
முழுமுழுவர்ணமாக பொரிக்கக்கண்டேன்
எண்ணிஎண்ணியெல்லாம் யிருபத்தோரதினுசாக
பலபலவிதமாய்ச் சமைக்கக்கண்டேன்
பலபலவர்க்கமாகச் சமைக்கக்கண்டேன்
பாண்டத்தில்வேறேசாதம் சமைககக்கண்டேன்
ஆறைப்பொறியலும் அவட்டலும்துவட்டலும்
பணியாரவிதத்துடன் பலவகையும்
உருக்கியநெய்களுடன் பொறிக்கறியாஞ்சுவாமி
உளுந்துவடைகளுடன மாங்களியாம்
வருந்திவருந்தியொருவிருந்துக்கோரையரை
பண்டாரந்தன்னைவீட்டி லழைக்கக்கண்டேன்
அய்யரும்உள்ளவந்திருக்கக்கண்டேன்சுவாமி
வெங்களப்பாவுமெதிர்ப்பட்டு வரவுங்கண்டேன்
போதும்போதும்பிள்ளாநீ கண்டகனவப்பா
பொல்லாதசொற்பனத்தைக் கண்டாயோடா
நீகண்டசொற்பனங்கள் நீங்கும்படிககல்லவோ
கைலாயத்திருமுறை யேந்திமென்றார்
ஆயுரந்திருமுறை யோதினுஞ்சுவாமி
அறுக்கததவறுமோ சொல்லுமென்றார்
கோடித்திருமுறை யோதினுஞ்சுவாமி
என்னைக்கொல்லதவறுமோ சொல்லுமென்றார்
ஆனாலும்குருமொழிதவர வொண்ணாதாகாண்
அப்படியே திருமுறை யோதுவானே
அறிவோம் அறியவென்று வேதப்பெரும்பாராயணம்
கைலாயத்திருமுறை யோதுவானும்
கயிலாயத்திருமுறை யோதுமளவில்
தமிழானசிறுத்தொண்டன்மகனேயென்றான்
தசுப்பனை கண்டல்லவோ தம்பிசீராளனும்
தான்பள்ளிக்கூடத்திலே போயொளித்தான்

வந்ததொருசிறுத்தொண்டன் பள்ளிக்கூடந்தேடி
வாசிக்கும்பிள்ளைகளைத் தானழைத்து
எங்கள்குடிப்பிள்ளைநம்பியில்லையோ தம்பி
பெங்களுக்குரியபாலனாரிங்கில்லையோ
பள்ளியிலேகூடி விளையாடுகிறதம்பி
பட்சமுடன்தகப்ப னழைக்குகின்றார்
சிந்தைதெளிந்து சீராளதேவனும்
சீக்கிரத்தில்வாத்தியார்தன் மின்னேவந்தான்
வாத்தியாரைத்தெண்டம் பண்ணுவானும்தம்பி
தோழமாரையோ வந்துக் கட்டுவானும்
கள்ளமுண்டோசுவாமி கள்ளமுண்டோவையா
கண்டகனவிலே கொஞ்சம்பழுதுமுண்டோ
பொய்யாயிருக்குமோ சொன்னதளவிலே
தொழுதல்லோ யெங்களப்பாவந்தாரையா
அழைக்கின்றதகப்பனா யவர்பின்னேபோனாலே
அடியேன்வந்தனபாதங் காண்பேனோதான்
முத்துக்கடுக்கண் கழற்றுவானுந்தம்பி
மோகனமாலைதன்னை வாங்குவானும்
அஷ்டாபரணமெல்லாம் கழற்றுவானும்தம்பி
அபரஞ்சிமாலைதன்னை வாங்குவானும்
தாளிப்பதக்கங்களில் சரிகைதுப்பட்டாக்கள்
சந்திரகாரந்தன்னை வாங்குவானும்
பொன்னாபரணங்கள் பட்டாடைகழற்றிப்
போற்றிசெய்தவாத்தியார் முன்னேவைத்தான்
கண்ணோடேகட்டியே பாம்பசுபத்தெட்டும
வாத்தியாருக்குத்தந்தனக்கே சரணமென்றான்
முக்கால்வலம்வந்து சீராள்தேவனும்
முத்தமிழ்வாத்தியார்க்கே தெண்டனிட்டான்
வந்தாலேபிங்குவந்து வாசிக்கிறேனடியேன்
வருகாமற்போனாலீசன் பதமடைவேன்
சேர்ந்தல்லோநான்காம பதவிக்கிடமாகி
தெய்வவுலகப்பதவிபெற்றுவாழ்வேன்
தந்தைவந்தழைக்கிறார் வெகுநேரமாயிற்று
தாமதங்களில்லாமலே சிலவருளும்
அறிவுள்ளசீராளா உன்னைப்போலகல்விகள்
ஆயிரம்பிள்ளைகளில் கண்டறியேன
அறிவென்றசொல்லுக்கு சொன்னதேயல்லாமல்
ஆயிரஞ்சுருதிநூய் நீபடித்தாய்
ஆயிரம்பிள்ளைகட்கு நீயேதலைவனாய்
ஐயருக்கொருதறைவு வாராமலே
குறைவில்லாபாக்கியங்கள் எனக்களித்துத்தம்பி
கூடியிருந்துபரலடிசலுண்டு
விட்டும்பிரியவல்லேலோ சீராளதேவாநீ

வேறானசொற்பனங்கள் கண்டுசொன்னார்
அறியாதான்கண்டகனா சீராளதேவாநான்
அசலார்க்குத்தாங்குமென்றே நானிருந்தேன்
பாலன்கண்டகனா சீராளதேவாநான்
பலபேர்க்குச்சாயுமென்றே நானிருந்தேன்
நீகண்டசொற்பனங்களுனக்கேபலித்தது
நிமலனுடசிவன்செயலென்னமோதான்
ஆரைசதமென்பேன் சீராளதேவா
அன்னியரைத்துஞ்சமென்று நான்வளைப்பேன்
எவரைச்சதமென பேன்சீராளதேவா
இனியாரைச்சதமென்று நான்வளைப்பேன்
போரீரோஎன்னைவிட்டு சீராளதேவா தம்பி
புண்ணியவானேநானென்னசெய்வேன்

சீராளதேவன் வாத்தியார்க்கு மனந்தேரச்சொல்லல்

தங்கள்மனதிலென்ன சுவாமிமனக்கவலை
தலைமுறைமூனறுக்கும் தனமிருக்க
ஏங்கியிருக்கவேண்டாம் என்தலைவிதியைத்தான்
எவரால்விலக்கஞ் சொல்லுமையா
என்னையறுத்துக்கறி சமைத்துஆண்டிக்கிடவே
ஆதிசிவன்விதிப்படியானால்
உன்னாலுமென்னாலாவதுண்டோ
ஊழ்வினைப்பயன்றனை விலக்கவென்றால்
மண்டையிலேஎழுதி மயிரால்மறைத்தல்லோ
வைத்தாரோஎன்னுடைய தலைவிதியை
மண்ணோடேமண்ணா மறைந்துவிடுந்தேகம்
வளர்கின்ற அக்கினியிலேறிந்துவிடும்
காக்காய்கழுகுள் நாய்நரிபுழுக்களும்
கலந்துபிடுங்குமந்த தேகந்தன்னை
வீணாய்போகாம லுனக்குதைவியாக
விருந்துக்குவுபயோக மாயிருந்தேன்
கழுத்தையறுக்கவர் வருகின்றவேளையிலே
கர்த்தாவைநினைத்வதாரு மந்திரஞ்சொல்லும்
கத்தியோடுகழுதிலே தைக்குமளவிலே
பத்திரூத்தஓம்நமசிவாயவென்னும்
ஐந்தெழுத்துமந்திரத்தை நெஞ்சியில்பாவித்தல்
அதிலுள்ளகர்மமெல்லா மகன்றுவிடும்
அருளரும்தேவா அப்படியாகுதென்று
ஐயருக்குத்தீர்க்கநமஸ்காரஞ்செய்தான்

சீராளதேவன்தோழன்மாருக்குப்புத்திகூறல்.

வர்த்தியாரைத்தண்டஞ்செய்தல்லோதம்பி
தோழன்மாரைஓடிவந்து கட்டிக்கொள்வான்
என்னுடன்வாசிக்கின்ற தோழன்மாரே தம்பி

ஏழையல்லோநம்மிட குருக்களையர்
    பள்ளிக்கூடங்கலையாமல் கற்றுக்கொள்ளுங்கள் தம்பி
சனியெண்ணையும்வரட்டி தவைடிக்கொடுங்கள்
    மாதம்வரிப்பணம் தண்டிக்கொடுங்கள்
வாவு அரிசிப்படி தான்கொடுங்கள்
நவமிக்கொருதரம் ஐபருக்கும்பொன்பணம்
    நலமாகத்தான் கொடுந்துக் காத்திடுங்கள்
நாளிருந்தபாவனையாம் நீங்களிருங்கள் தம்பி
    அரியென்றவாத்தியாருக்குத் தடைசொல்லாமல்
சிராளன் வாத்தியார் பிள்ளைகளிடத்தில் செலபெற்று

தன்மீடத்துக்கு வருகின்றது

ஐபருக்கும்பிள்ளைகட்கும் ஆறுதலைசொல்லி
    ஐயனார்முன்னேவந்து தெண்டஞ்செயதார்
தன்னைபெற்றதகப்பனார் முன்னேவந்துசிராளன்
    தயவுடனேயவனே துசொல்வான்
வழியிலேகள்ளுமுள்ளு பில்லுசள்கண்டாலென்
    உள்ளங்கால்முள்ளோடுதைக்குமென்றார்
உள்ளங்கால்முள்ளோடு தைத்ததுயாமானால்
    உதிரங்கள்மிகுதியாய்சொரிந்திடுமே
வுதிரங்கள் மிகுதியாய் சொரிந்ததேயாமானால்
    உண்ணுரேஜயர் வுந்தனமடந்தனிலே
என்னையெடுத்துவுந்தன் தோளின்மேலேவைத்து
    எழில்பெரியமாளிகைக்கு நடவுமென்றான்
சிறியவர்சொல்லும்புத்தி நிச்மென்றுஎண்ணியே
    பெரியவர்தோளின்மேலெடுத்துக்கொண்டார்
    பெரியவர்தோளின்மேலே எடுக்கும்போழுதில்
பெருகுஞ்சுனேலேதாயார் மூழுகிவந்தாள்
    வெள்ளையானவஸ்திரத்தைகட்டுவாளாநங்கை
மெய்யானபுஷ்பங்களை முடித்துக்கொள்வாள்

திருவெண்காட்டுநங்கை சிறுத்தொண்டபத்தனையும்
    சீராளதேவனையும் காணுமல்வருந்துதல்

அன்பன்வருபின்ற வழக்குமுன் வந்து
    ஆலோசனைகள்செய்து ஏதுசொல்வாள்
பிள்ளையழைக்கபோனசிறுத்தொண்டனை
    யின்னம்வரக்காணேன்என் செய்வேனென்பாள்
சத்தியிருந்திங்கே உலரவும்தன்பாள் நங்கை
    கறிக்கூட்டுவர்க்கமெல்லாம் புளிக்குதென்பாள்
ஆத்தியடிதனில் வீற்றிருக்குமையர்
    அவர்பசிபாலென்னசாபந் தருவாரரென்பாள்
பள்ளிக்கூடம்நோக்கி வெண்காட்டுநங்கைதானும்
    பாலகனைப்பார்த்து தானழைப்பேன்

178160
சென்னை-600 00

நான்பெற்றமகனே வாராயோடா தம்பி
நல்லசிவுசீராளதேவா வாராயோடா
பள்ளிக்குப்பிள்ளையேநீ வாராயோடா தம்பி
பாலகன்சீராளதேவா வாராயோடா
கூவிபழைக்கும்போது வெண்காட்டுநங்கைதானும்
கொப்பெனசிறுத்தொன்முன்னேவாரான்
தாயாரழைக்குஞ்சத்தம் தனைக்கேட்டுசீராளன்
தகப்பன்தோள்மீதிலிருந்துயேதுசொல்வான்
வந்தேனம்மாபிள்ளைவந்தேனம்மாதாயே
வருந்தாதுவிருந்திட வாருமென்றாள்
வந்தவொருபிள்ளை தன்னையிங்கழைத்துதாயார்
வர்ணமடியில்வைத்து பால்கொடுத்தாள்

திருவெண்காட்டுநங்கை சீராளனைகுளிப்பாட்டி

தொட்டிவில்வைத்து தாலாட்டுதல்.

வர்ணமடியில்வைத்து பால்கொடுத்துப்பிள்ளையை
மஞ்சள்நீர்ச்சாலைக்குக் கொண்டுசென்றார்
சம்பங்கியெண்ணைக்கொண்டு தாயுர்தகப்பனும்
தாளவேகூந்தல்கோதி,காப்புமிட்டார்
பூவசனைபெண்ணையும் மணலெண்ணையுங்கொட்டி
பிள்ளைப்பூமுடிக்கவர் காப்புமிட்டார்
சீக்கால்நெல்பியுடன் சிருப்பருப்புங்கஸ்தூரி
சீராகபிள்ளைதலைக் கள்ளித்தெளித்தார்
ஜெங்நீரவிளாசிறுத்தொண்டன் களிக்கவே
வெண்காட்டுநங்கையம்மை தலைகோத
தாயுந்தகப்பனுமாமுழுக்காட்டிபிள்ளைதன்னை
சரிகைதுப்பட்டாகொண்டு தலைதுவட்டி
நெற்றிக்குநெறிபட்டங் கட்டுவாளர்ந்தாயார்
நேர்விழிக்குமையெழுதி பொட்டுமிட்டாள்
முத்துக்கடுக்கனைப் போடுவாளார்தாயார்
மோகனமாலை தன்னைப் பூட்டுவாளாம்
அஸ்தகடகங்கள் போடுவாளாந்தாயார்
அபரஞ்சிமாலைதன்னைப் பூட்டுவாளாந்தாயார்
தனிபதக்கங்களைப் பூட்டுவாளாந்தாயார்
சந்திரபிரைசூரியபிறை தரிப்பாளாம்
பொன்னுபரணமெல்லாம் பூட்டுவாளாந்தாயார்
பிள்ளைமுகத்தையுற்றுப் பார்ப்பாளாம்
தயார்முகத்தையுற்றுப்பார்த்து நகைத்தல்லோ
சந்தோஷத்துடன்பிள்ளை யேதுசொல்லும்
இத்தனையும்வேண்டுமோ மாதாவேஇப்பொழுது
இறந்துபோகும்பிள்ளைபெந்தனுக்கு

மதிக்கிறேனென்று சொல்லிமயங்காதே மகனே
அறிந்தவயனார்தன்னைச் சொல்லாடா
சிறிப்பேனமூவேனென்று சொல்லவர்ப்தாயேநீ
தெய்வங்களும் திங்களுமுளவானல்
அப்பாடா அப்பாவென்று அழுகாலேயப்பன்
கழுத்தறுக்கக்கத்திதனைத் திட்டுவாரே
அம்மாடி அம்மாவென்று அழுதாலேயம்மா
வாயில்பஸ்பத்தைக் கொடுத்துவைப்பாய்
தெய்வமே தெய்வமென்று அருங்காலேயென்னை
அறுத்திடத்தின்வந்த தெய்லங்தானே
ஆறைநினைத்தழுவேன் சொல்லுமம்மா தாயெ
ஆயுசுமுடிவிது சரியானல்
ஆத்தாளைசதமென்றால் அறைகுறைதீருமென்று
அறிவிலேசிரிக்கேனம்மா பெற்றதாயே
சீராளனுறைகேட்டு திருவெண்காட்டுநங்கை
சிரிக்குந்தன்மகனுடனேதுசொல்வாள்
கற்றதெர்ருகல்விதனைப் பேசாதேஎன்மகனே
காத்திருக்கின்றுரைய்பர் பசியுடன்
இங்காளுமழலைச்செல் கேட்டிருப்பேன்மகனே
இன்றைகருநேரமில்லைநித்திறைசெய்யும்
தூங்குமகனேயென்றவள் தொட்டிலிலே
செற்பமறியதொட்டிலிலே வளர்த்துவாளாம்
காம்பரிந்தஜங்கல மல்லிகைமெத்தையின்மேல்
கால்கோஞ்சைகைகோட்டை திண்டுமிட்டாள்
மல்லிகைமெத்தையின்மேல் மைந்தன்சீராளனை
மாதாவளர்த்தியே தாலாற்றலுற்றாள்
சந்தனங்கையென்னுந் தாதியொருபுரம்
தாயாரொருபுரம் தாலாட்டுகிள்றாள்
நித்திறையோமகனே நித்திறையோயப்பா
நித்திரைபொன்தொட்டிலிலே நித்திரைபோடா
கட்டிகரும்பேநீ நித்திரைபோமகனே
கணுவில்லாச்செங்கருபே நித்திரைபோடா
வேலிகரும்பேநீ நித்திரைபேமகனே
விடய்தீற்கும்செங்கரும்பே நித்திரைபோடா
பிள்ளையில்லையென்றுசொல்லி தில்லைவனம்போய்முழுகி
போதத்தவமிருக்க வென்மகனே
மைந்தனில்லையென்றுசொல்லி வானவறைதானேக்கி
வருந்திதவமிருந்தேனென்மகனே
மழைமாசிபோல்வந்து வயிற்றிலவதறித்தல்லோ
மைந்தனெனவந்தகுறை தீர்த்தோனே
கொடிபர்சிபேலேயல்லோ வயிர்றில்தறித்துநீ
கொஞ்சியேகல்வியெல்தாம் தீர்தவனே

பிள்ளைகலியெனக்கு தீர்க்கவந்தோனேயென்
பெருமானே சீராளா நீத்திரைபோடா
மைந்தன்கலியெனக்கு தீர்க்கவந்தோனேயென்
மகனேநித்திரைபோ கண்மணியே
வண்டினங்கள்பாட மரங்களிலேசோர
வாழுமன்னங்களது கலிபூட்ட
தாலாட்ட தாலாட்ட சீராளதேவனுக்கு
தாங்குகண்ணு நித்திரைகள்வாராமல்
ஆதிசிவன் தன்னை அறிவில்நினைத்தல்லோ
அன்பன்சீராளதேவனேதுசொல்வான்
நித்திரைவாராமல் வீற்றிருக்கிறான்
நீங்களும்பசியுடன் காத்திருக்க
அறுத்துகறிசமைக்கசமையங்களில்லாமல
ஆச்சிமாரிருந்தவர் தாலாட்டிருக்க
பாவங்கள்வந்தணுகாதல் தவங்கள்வந்தணுகவே
பர்ருங்கிருபைசெய்யும் பரமசங்கமரே
அறியும்பொழுதுபமவாதனையில்லாமல்
அந்நேரங்காலனை தியானஞ்செய்தார்
ஈசனைநினைத்து யிருகண்களைமூடி
இருக்கின்றானே நிததிரைவந்தவன்போல்

கிறுத்தொண்டபத்தனும் திருவெண்காட்டு நங்கையும்
சீராளனை அறுக்கின்றது.

சந்தனபலகையை தாழவைதது அன்பன்
சதிருடனே கத்தியைதீட்டுவானும்
குங்குமப்பலகையை தாழவைத்து அன்பன்
குளிரக்குளிரக்கத்தி தீட்டுவானும்
கத்தியைத்தீட்டி கையிற்பிடித்தானே
கண்காட்டிவெண்காட்டா ளென்னசெய்தாள்
மைந்தனைவாரியவள மார்போடணைத்துவந்து
மாணிககபீடத்தில் வளர்த்தினனே
பொற்பலகைமீதி விருத்திவைததுத்தாயர்
பிரளாமல்காலுங்கையுமேபிடித்தாள்
கர்த்தனைநினைத்தல்லோ கத்தியெடுத்து பததன்
கழுத்தையருக்கமனந் தான் துணிந்தான்
தாயாருங்கைகாலும்பிடிக்கவேபெற்ற
தகப்பனும் கழுத்தையருப்பானும்
ஸ்ரீ அரிராமாவென்றுசொல்லியே சீராளன்
ஊட்டியிலே கத்தி நாட்டுவாராம்
அப்போது சீராளன் அறிவுள்ளபாலகன்
மாடப்புராக்களும் மயிலுமொருபுறம்
மைந்தன்சீராளனுக்குத் தாலாட்ட

அன்போடுதன்மனதிலென்னசொல்வான்
கத்தியோடுகழுத்திலே தாக்குமளவிலே
பத்திமுத்தி ஓம நமசிவாயாவென்பான்
பத்திமுத்திஓம நமசிவாயாவென்றான் பிள்ளை
உண்டபாலுதிரமாய் சொரிந்திடுமாம்
பால்வாயைக்கண்டல்லோ சிறுத்தொண்டபத்தன்
உதரிகைகத்தியை மெள்ளசேரவிட்டான்
என்றுதான்பெற்றமகனே மகனேயென்று
சிறுத்தொண்டபத்தனும் புலம்புவானும்
எட்டெனறால்ரெண்டுமினியறியாதபாலகனை
எட்டிலெழுதிவைகதுப் பார்த்ததில்லை
பத்தென்றால்ரெண்டுமினியறியாதபாலகனை
படத்திலெழுதிவைத்துப் பார்த்ததில்லை
புலம்பும்புருஷனைக் கண்டு திருவெண்காட்டாள்
புத்திமதிகள்திடமேது சொல்வாள்
தலையறுத்து கட்டைதாழவிழப்போகுது
தவறுமலறுங்காணும் பிள்ளைதலையை
தூக்கிபிடித்தொரு தலைதனிலேயின்ன
கொண்டதவங்களது குறையாமல்
தாயாருங்கைசாலும்பிடிக்கவே பெற்ற
தகப்பனுங் கழுத்தையருப்பாரும்
கழுத்தையறுத்து கழன்றவுதிரத்தை
கறிசட்டிதன்னில்வேறே வாங்குவாளாம்
எடுத்தபணியாரபொரியல் சமைத்தல்லோ
இடவந்தபெருஞ்சட்டி லிறக்கிவைத்தாள்
சீராளன்தாதியை தலைக்கறிசமைக்கச்சொன்ன
வாடிமகளாரே சந்தனநங்கையே
தலையைதான்கொண்டுபோய் புதைத்துவாடி
மறந்தானேசிறுத்தொண்டன்சொன்னசொல்லைத்தானே
மகாதேவரட்சணமேயேதுசெய்வார்
சிரந்தனைக்கரங்கொண்டுசென்றதொருதாதிக்கு
சீராளன் வாய்த்திறந்தேதுசொல்வான்
தாயுந்தகப்பனுக்கு மறதிகளுண்டானால்
தாதியுனக்குமதிகெட்டோடி
எண்சாணுடம்புக்கு சிரசேபிரதான
இத்தையறியார்கள் மானிடர்கள்
சொல்லப்பட்டதிருநாவுமிக்கிருக்குதாயே
சுகமறியாமூக்குகளிங்கிருக்க
கேள்விகேட்கப்பட்ட திருச்செவியிங்கிருக்குதாயே
எப்படிக்கு நீபுதைக்கபோறாயம்மா
நரகமல்லோமுண்டம் நாறுமுடலைமா
ஞாதர்பொசிப்பதில்லை தாதியென்றாள்

யமைத்துவைத்தாயானாகில் தாதியுனக்கு
சாகாமல்குருபாதம் வரமளிப்பார்
அருளருளுர்தம்பி அப்படிநான்செயவேன்
அந்நேரம் சந்தனநங்கையவள்
உரலிலேதலைபோட்டு துவப்பாளாந்தாதி
உருப்பானமூளைபத்தும் வாங்குவாளாம
கண்ணுக்கறிகள்வேறேபொரிப்பாளந்தாதி
காதுக்கரிகள்வேறே சமைப்பாளாம்
அறுத்தமுண்டந்தன்னை முழுகிக்குளிப்பாட்டி
அவிக்கவென்றேயிவ ரெடுத்துவந்தார்
கொத்திக்கிளறிறே பெருந்தாளியில்வைத்து
குறுகவேதீமூட்டி அவிப்பாளாம்
அவித்தமுண்டந்தன்னை யிறக்கியேதாயார்
அறிவாமணையில்வைத்து அறிவாளாம்
ஈரல்பிளந்துவேறேசமைப்பாளாம்
இறச்சிவிதவிதமாய் பொறிப்பாளாம்
பக்கத்தெலும்புகள் பழுவெலும்பானதை
பதைக்கப்பதைக்கப்பிடித் தறுப்பாளாம்
நெஞ்சடிநிணக்குடல்வாங்குவாளாம்
நிணக்குடலொருசட்டி வாங்குவாளாம்
பொன்பூண்டமார்பையும் நெஞ்சார்குடலையும்
பொறிக்கரியாகவேசமைப்பாளாம்
மார்புசதைகள்வேறே வாங்குவாளம்மாள்
வலதுதொடைகள்வேறே பொரிப்பாளாம்
பாடகமிட்டதொருகணுக்கால்மட்டிலே
பட்டாடைமேலேவைத்து தரிப்பாளாம்
முழங்காலெலும்புகள் முதுகெலும்புகளெல்லாம்
முளகுநீராகவே வைப்பாளாம்
கணுக்காலெலும்புகள் கணுவெலும்பெல்லாம்
கழுதழுவர்ணமாகப் பொரிப்பாளாம்
எண்ணியெண்ணியல்லோ யிருபத்தொருவிதமாய்
பலபலவர்ணமாக சமைப்பாளாம்
பலபலவாகக்கறி சமைப்பாளாம் மூன்று
பாண்டத்திலேவேறுசாதம்சமைப்பாளாம்
ஆல்பொரியலும் அவிட்டலுந்துவட்டலும்
பணியாரவிதத்துடன் பலவகையும்
புத்திருக்குநெய்யுருக்கிக் காச்சிவைத்தாளம்மாள்
போதவேசங்கமரைகூட்டிவாவென்றாள்
காராவிநெய்புருக்கி காச்சிவைத்தாளம்மாள்
கடுகியே சங்கமரை அழையுமென்றாள்
இந்நேரசங்கமரும் இளைப்போடிருக்கிறார்
இட்சணமேசங்கமரை கூட்டிவாவென்றாள்

ஒருசுற்றுவேஷ்டியுந் தரிப்பானும் பத்தன்
ஒருபக்கம்பூநூல் போடுவானும
திருவெண்ணீறஞ்செழுத்தை ஓதுவானும் பத்தன்
திருக்கொன்றைமாலையொன்று போடுவானும்
திருக்கொன்றைமாலையொன்றுமார்பில் அசையவே
திருவாத்திதிசைநோக்கிநடப்பானும்

சிறுத்தொண்டபத்தன் சுவாமியாகிய பண்டாரத்தைக்காணுதல்.

திருவாத்திமரந்தன்னைத்தேடிவந்து பத்தன்
தெண்டநமஸ்காரஞ்செய்குவானும்
ஆத்திமரந்தன்னைத்தேடிவந்துபத்தன்
அறியேநமஸ்காரம் போற்றிகின்றான்
ஆதியே உன்பாதம் போற்றிபோற்றி சிவனே
அம்பலவாணரேபோற்றி ஐயா
சோதியே உன்பாதம்போற்றிபோற்றிசிவனே
சிதம்பரதேவனாரே போற்றிஐயா
ஆச்சுதுபோசனங்களய்யனாரேசிவனே
அமுதுண்டமடத்துக்குவாருமையா
ஆச்சுதுபோசனங்களையனாரேபரனே
அமுதுண்டமடத்திற்குவாருமையா
போற்றியிடுகிறசத்தந்தன்னைக்கேட்டு
புலிமுகவாணனுபுலிமுகவரணனார் முகம்பார்த்தார்
அழுதகள்ளா தொழுதல்லா யெழுந்திரடா பத்தா
ஆசாரக்கள்ளனா ரெழுந்திரடா
கும்பிடுங்கள்ளா நீ யெழுந்திரும்பத்தா
குழைத்திடுங்கள்ளனாரே யெழுந்திரும்பத்தா
அன்புள்ள கள்ளா நீ யெழுந்திரும்பத்தரே
ஆசாரகள்ளாநீயெழுந்திரடா
உச்சிக்குமுன்னாலே அமுதுபடைப்பேனென்று
சத்தியமாய்முகந்துநீர் தாரைவார்த்தாய்
உச்சிக்குயோரடிதாழ்ந்து போச்சுதுபத்தா
உண்ணனோடா உன்னிடமனையிடத்தில்
உனக்கண்டைவீட்டுக்கார பத்தனொருவன்
அமுதிக்குவரச்சொன்னானங்கேபோறேன்
மேலண்டைதெருவிலேபத்தனொருவன்
விபூதியையுங்கெடுவு தருவனென்றான்
இன்பமானபடிக்கி யிருந்தானொருவன்
இளைப்பாறிவந்தமாந்தே னப்பாவென்றார்
இப்படிக்கிதேவர்சொன்ன வேலைக்கானென்செய்வேன்
என்னாலேகுற்றமொன்றும் வருவதில்லை
போகவும்சென்றதையா சிலநேரம்பிள்ளையை

அழைக்கவும்சென்றுதையா சிலநேரம்
அழைக்கவும்சென்றுதையா சிலநேரம்பிள்ளையை
அறுக்கவும்சென்றுதையா சிலநேரம்
அறுக்கவும்சென்றுதையா சிலநேரம்கறி
யரியவும்சென்றுதையாசிலநேரம்
அரியவுஞ்சென்றுதையா சிலநேரம்கறி
சமைக்கவுஞ்சென்றுதையாசிலநேரம்
கறிசமைக்கவும்சென்றுதையா சிலநேரஇங்கே
வருகவும்சென்றுதையா சிலநேரம்
அத்தாலேகுற்றமில்லை தம்பிரானேசிவனே
அடியேன்வடத்துக்கு தேவரீரவாருமையா
பிள்ளையறுத்துக்கறிசமைத்தாலென்னபத்தாஉன்
பெண்சாதிநீயுமாய்கொள்ளுமென்றார்
இப்போருஒவன்வந்து போசனம்சொன்னான்
இதோபோறேனவனுடை மாளிக்கு
பொய்யன்கள்ளன்சூதன் நீதானபத்தா
யெழுந்திருந்த யிடத்தைவிட்டு
பொய்யன்கள்ளன்சூத்ன் நானல்லசுவாமி
போசனங்களுண்ணுதற்கு வாருமையா
ஆறுகுற்றமநூறுபிழை அடியேன்செய்தாலும்
ஐயாமனம்பொறுத்து எழுந்தருளும்
இந்நேரம்தேவரீர்மெத்த யிளப்போடிருந்தீர்
எழுந்திருந்தேவரமுதுண்பதற்கு
ஐயாதன்மனமிரங்கி சிறுத்தொண்டபத்தனே
ஆசானத்தையெட்டாவாறேனென்றார்
இதுநல்லநல்லதருணங்க ளாகசூதுஎன்
யெடுத்தார்புலிதோலாசனத்தை
ஆசானத்தோல்போட்டு ஆத்திமரம்விட்டார்
அண்டவர்முனிவர்தேவர் கொண்டாட
இத்தெருவுகோடியிலேவருவேனேடாபத்தா
அத்தெருவுகோடியிலே வருவேனேடாபத்தா
இச்சையானவீதியிலே பித்தனாரேசிவனே
யெழுந்தருளும்தேவரேவாருமையா
திருமதுரைவீதியிலுள்ளோர்மனமறிய
வேணுமென்றுதிரும்பினார்சங்கமரும்
கலீல்கலீலென்று நடப்பாராமையர்
கால்பிணிநூல்பிணிவாராமலே
ஆடியடமரகஞ் சாடிம்பாரையர்
அண்டரண்டபுவனங்கள்தீர்ந்திடவே
திருக்கையில்டமரகம்சாடிப்பாரமையர்
தேவாதிதேவரெல்லாந்திடுக்கிடவே
திருவடிக்கமலமுந்திருச்சிலம்போசையும்

கையினில்சூலபகாலமுமே
கையில்பிரம்புகபாலந்தன்னையேந்தி
கயிலாசநாதர் பிச்சைகேட்பாராம்
ஓலைக்கடன்முறி கிளிப்பாருண்டோவுலகில்
உத்தம்தான் தருமஞ்செய்வாருண்டோ
கூலிக்குத்தியன்னங் கொடுப்பாருண்டோ
கொட்டை நூற்றன்ன தானங் கொடுப்பாருண்டோ
தாலிவிற்றன்ன தானங் கொடுப்பாருண்டோவுலகில்
சாதனித்தம்அன்ன தானங் கொடுப்பாருண்டோ
கைலாசநாதர்பிச்சைகேட்மளவிலே
கண்டார்கள் திருமதுரைவீதியிலுள்ளோர்
பிள்ளைதின்னுமாண்டி வாரானென்பார்சிலபேர்
பிணந்தின்னும்பித்தனிவர் வாரானென்பார்
மைந்தன்தின்னும் ஆண்டிவாரானென்பார்பார்சிலபேர்
மருளனவன் பித்தனிவன் வாரானென்பார்
தன்பிள்ளை அசல்பிள்ளையை மரிப்பாராம்சிலபேர்
தலைவாசல்கதவோடி அடைப்பாராம்
தாங்கள் தாங்கள்பிள்ளையை தாங்களெடுத்து வந்து
தலைக்கடையாலும்பிழைக்க கடையாலும்போவாரும்
இவர்கள்மனம்சோதிக்க ஈஸ்வரன் தான் கண்டு
என்ரூபங்கொண்டாரந்நேரம்
தலைக்கடையிலொரு ஆண்யனார்சிவனும்
புறக்கடைக்கங்கையொரு ஆண்டியானார்
நாலைந்துபிள்ளையெனக்கு ஆகாரந்தந்தாலே
நான்போவேனிவ்விடம்விட்டுதம்பிரானும்
க்தலைக்கடையுலொருவந்து ஆரையாவென்றான்
தம்பிரான்பிள்ளை தின்ன வந்தேனென்றார்
பின்னுங்கதவடைத்து பேசாமலிவர்கள்
பிழைக்கடையிலோருவன்வந்து ஆரையர்வென்றார்
பிள்ளைதின்னும் ஆண்டியிங்கே வந்தேனேடாபத்தா
பேசாதமூன்றுபிள்ளை வேணுமோடா
பொல்லாதகாலங்கள் சொல்லாதேவந்துதென்று
பேசாதகதவடைத்துத் தானிருந்தார் [றாம்
பிள்ளைதின்னும் ஆண்டிரென்றும் பிணந்தின்னும் பித்தமனன்
பேய்க்கள்பிணத்துதேசுவாமியைக்கண்டு
நெற்றிக்கண்ணாலேகடைப்பார்வையானார்சுவாமி
நீருகப்போச்சுதார திருமதுரை

திருமதுறைவீதியெல்லாம் நெருப்பாயெரித்து
  திரும்பினார் சிறுத்தொண்டன் வீதியிலே
மஞ்சள்பிளந்துவாழை நாட்டுவாராம்சிலபேர்
  மடந்தன்னில்வந்து தோறணங்கட்டுவாராம்
இஞ்சிபிளந்துவாழை நாட்டுவாராம்சிலபேர்
  எலுமிச்ச தோரணம்கட்டுவாராம்
தண்ணீர் தெளித்து தறைகோலந்தளிட்டு
  சாம்பிராணிதூபங்கொண்டு வருவாராம்
அரசிலைதோறணங் கட்டுவாராஞ்சிலபோ
  ஐயருக்குதூபங்கொண்டு போடுவார்ரம்
வெண்காட்டம்மன் வந்து பாதஞ்சொரிய அப்போ
  சிறுத்தொண்டபத்தன்வந்து பாதஞ்சொரிய
மல்லிகைமுல்லை யிருவாட்சியுடனே
  மருக்கொழுந்துமாக சாற்றுவாராம்
கொங்குகுடமல்லிகை சாற்றுவாராமன்பன்
  கொத்தோடேசெவ்வந்திப்பூ அணிகுவாராம்
பாதமதையர்ச்சித்து ஐயரைக்கூடியே
  பதினெட்டாங்கட்டுகுள்ளே யிட்டுவந்தார்
தங்கப்பொற்பலகையுந் தான்பலவளித்தான்
  தள்ளிவிட்டார் சுவாமிகாலாலே
புலித்தோலாசனத்தைப் போட்டமர்ந்தார்சுவாமி
  பொக்கணத்லைதக்கழட்டி பக்கம்வைத்தார்
ஆசனத்தைப்போட்டு தானமர்ந்தார்சுவாமி
  அண்டையிலேதிருவோடு மாத்திரையும்
தலைவாழையிலைக்கொண்டு மூன்றிலைபோட்டு
  தண்ணீர்தெளித்தெதிரே நில்லுமென்றார்
தெரியவுரைக்கிறேன் சிறுத்தொண்டபத்தாவுனக்கு
  தேவியரிருவருண்டு பொல்லாதவள்
மூத்தபிள்ளையொருவன் பார்த்திருப்பான்வழியை
  முன்னாலேவருகுமே யதுக்கிளையபிள்ளை
பொல்லாதபிள்ளை யெனக்கொருவனுண்டு
  போடா அதுக்கொரு யில்லையுமென்றார்
உன்பிள்ளையைகொன்றதொரு தோஷந்திற
  சாஸ்திரியொருவன் வேணுமென்றார்
அதிதிக்கும் ஆயிரம்பேர்க் கன்னங்கொடுப்பேன்
  அரிதாச்சிஇன்றைக்கு ஒருவரென்றா
எங்கெங்குந்தேடிவந்தேன் ஜங்கமறைகாணாமல்
  இருந்தீரொருவரிங்கே ஈஸ்பரன்போல்
நானென்னபாவதோஷஞ் செய்தோனோசுவாமி
  நங்கையென்ன பாவதோஷங்கள்செய்தாளோதான்

ஆருமகப்படாமல் போனதினால்சுவாமி
 ஆதரிக்கநீயொருவர் வந்ததினால்
உன்னைவிடவெனக்கு வேறொருதெய்வ
 முண்டோயெனக்குசுவாமி மண்டலத்தில்
ஆருமொருபண்டாரங்களகப் பட்டார்களேயென்றீர்
 அமரடாநீயாகிலும் பக்கம்வந்து
தன்பிள்ளைக்கறியைத்தான் பொசிப்பானோவென்று
 சுவாமியவன் மனதை சோதிக்கின்றார்
அப்படியானால் பொசிக்கிறேனென்று
 அமர்ந்தனேஐருடபக்கத்திலே
ஐயருக்கோரிலை அஞ்சிலையும்போட்டு
 ஐயருமுன்னாலே நங்கைசொல்வாள்
உண்ணவுண்ணபடைக்கட்டோ பண்டாரமேசிவனே
 ஒருமுட்டாய்க்கொண்டுவந்து படைக்கட்டோ
ஒருக்காலேகொண்டு படையாயோதாயேயெங்கள்
 தம்பிராட்டியம்மனுக்கு பூசையாக
உண்டானசோறுவகை கறிவகையத்தனையும்
 ஒருமுட்டாய்க்கொண்டுவந்து படையுமென்றார்
சமைத்தகறிவகைக ளன்னமுந்தானே
 தாங்காமல்கொண்டுவந்து படைக்கிறார்
சிவிசுரண்டிஅம்மாள் பற்றொன்றுமில்லாமல்
 சேரவேதான்படைத்தா ளிலைதனிலே
இம்மட்டோதாயே இன்னமுண்டோசொல்லும்
 எங்கள் குலதேவதைக்கு பூசையாக
பாண்டத்தில்சலம்விட்டு பத்தியில்லாமற்கழுவி
 பாத்திரத்தில்கொண்டுவந்து வாருமென்றார்
அப்படியேகொண்டுவந்து படைத்தேன்காண்சுவாமி
 அமுண்ணுக்தேவர்பசியாயிருக்கிறீர்
உன்னைநம்பாலாமோடா சிறுத்தொண்டபத்தா
 உன்பெண்சாதியையெள்ளளவும் நம்பொணாது
ஒருபந்தியிலிரு வஞ்சனைசெய்தாளடா
 உற்றுப்பாரடாபத்தா யென்னிலையை
தலைக்கறிகளெல்லாம் உன்க்குவைத்தாள்
 நாரும்நரம்புமாக யெனக்குவைத்தாள்பத்தா
வேரும்விறகுமாக யெனக்குவைத்தாள்பத்தா
வேறேகறிகளெல்லாம் உனக்குவைத்தாள்
 உற்றமனுஷனென்று சொல்லிஉன்பெண்சாதி
உள்ளகறிகளெல்லாம் உனக்குவைத்தாள்
 வஞ்சனைகள்சூதுபொய்களொருக்காலும்வாராது
 மகாதேவரே அன்னங் கொள்ளுமென்றார்

மாமிஷமான்தெல்லாம் உனக்கேவைத்தாள்பத்தா
முட்டியெலும்பெல்லாம்யெனக்கேவைத்தாள்
இச்சையிருந்ததே யாமானால்தேவா
இந்தயிலைசாதங்கூடவுண்ணுமென்றார்
உண்ணுமென்றுபசாரஞ் சொல்லாதேபத்தா
உன்னிலைசாதங்கூட யெனக்குவையும்
அப்படியாகுதென்று அன்பினிலையும்
ஐருடன்முன்னு விழுந்துவைத்தான்
கைகட்டிமுன்னாலே போற்றிநின்றானன்பன்
கண்டல்லோஜங்கமரு மனமகிழ்ந்தார்
பூசையில்தூபதீப மானதேயாமானால்
பிள்ளைக்கொலைபிரபஹத்தி சுத்துமென்றார்
தந்திரவார்த்தைசொல்லி தம்பிரானுமப்போ
தன்னுடயெதிரேவந்து நில்லுமென்றார்
இளைப்பாயிருக்கிறீர் தம்பிரானேசிவனே
இந்நேரம்தேவரமுது கொள்ளுமென்றார்
தாம்பூலதட்சணைகள் வையடாபத்தா
சாம்பிராணிகற்பூரங்கள் கொண்டுவாவென்றா
கண்டேனடாபத்தாவுன் சூதுகளத்தனையும்
கைகட்டிபெற்றனுக்கு மோசஞ்செய்தீர்
எந்தனைசாக்கிட்டு உன்மைந்தனைநீதின்ன
யெத்தனைநாள் தவங்கள் செய்திருந்தீர்
எனக்கிச்சையிருந்தபிள்ளைக் கறிக்கிங்கேவந்தேன்
இன்பமானகறியிங்கே காணேனடா
தலைக்கறியில்லாவீட்டில் சாதமுண்ணேனடா
தவறுபல்ராமனமூந்து போறேனப்பா
ஆசனத்தோலைதா னெடுப்பாரச்சுவாமி
அவருடையபாத்திரத்தை கையிலெடுப்பார்
கஞ்சாக்குடுக்கையும் மாத்திரைக்கோலையும்
கமண்டலத்தேயெடுத்து தூக்கிவைப்பார்
ஐயர்பிணக்குகளவர்பிரவுங்கண்டு
அந்நேரந்திருவெண்காட்டு நங்கையம்மாள்
கையைநெரித்தாளம்மை கணகஞ்சொரிந்தாளம்மை
கணவன்பின்னேவந்து ஒளிந்தாளாம்
தலைப்புதையெனவே தாதிகையில்தந்தோம்
சமைத்துவைக்கச்சொன்னார் நாமறந்தோம்
புதைத்ததலைதன்னை யெடுத்துசமைக்கவே
போகல்லோசிலநேரஞ் செல்லுமேதான்
தம்பிரானென்ன சாபந்தருவாரோயினி
தப்பிதங்கள்நேர்ந்ததென்ன செய்வேனென்றாள்

அம்மன் அபரங்களை சந்தனநங்கை
    யறிந்தல்லோ யெதிரேவந்து தெண்டனிட்டாள்
மனதில்விசனமென்ன மாதாவே தாயே
    மகாதேவரென்னசொன்னார் சொல்லுமம்மா
தலையைப்புதையென்றே உன்கையில்தந்தேன்
    தலைக்கறிகேட்கிறார் ஜங்கமரும்
சமைத்தேனம்மா தலை சமைத்தேனம்மா தாயே
    யெடுக்கமறந்தேனம்மா யிந்தவென்றாள்
தலைக்கறிகொண்டுவந்தாள் சந்தனநங்கை
    யெடுத்துபடைத்தாளிந்த வெண்காட்டாள்
தலைக்கறிபடைத்திட்டோம் தம்பிரானே உனக்கு
    சாதங்கறியமுது உண்ணுமென்றார்
இந்நேரமட்டும் தேவரீர் பசியிருந்தீர்
    இப்பொழுது தேவரமுதுகொள்ளுமென்றார்
அறிந்தண்டா உங்களுட சிறுத்தொண்டபத்தரே
    ஆசாரஉபசார மோசமெல்லாம்
உண்ணலாந்தலைக்கறி பின்னாலேயென்று
    ஒளித்துவைத்தீர்கள் ருசியறிந்து
தலைக்கறியானது தம்பிரானுக்கற்புதம்
    தானறிந்தேயதை யொளித்துவைத்தீர்
நான்கேட்டதினால் தலைக்கறிகள்படைத்தீர்கள்
    கேளாமற்போனால்மோசஞ்செய்வீர்கள்
அப்படிக்குத்துரோகஞ் செய்வதுமில்லை
    தாதிபிசகதினால் வந்ததையா
மனமறிந்தேதுரோகஞ்செய்வதுமில்லை
    மகாதேவரேஅமுது கொள்ளுமென்றார்
இன்னமொருவசனங் கேளாய்பத்தா
    யிவ்விடத்தில்வந்துவெகு நேரமாச்சு
எழுந்தபொழுதிலே யிங்கேவந்தேன்பத்தா
    வடிந்தபொழுதுமட்டா யிங்கிருந்தேன்
இத்தடிகள்கடமாட வில்லையே பத்தா
    சிறுபிள்ளைகுரலோசை கண்டதில்லை
தண்டைச்சதங்கைசத்தங் கேட்டதில்லைபத்தா
    தாலாட்டும்சதங்கைசத்தங் கேட்டதில்லை
மலடனும்மலடியும் வாழ்கிறவீட்டில்
    வயிருவளர்க்கக்கணக் கில்லையென்றார்
ஆண்மலடுபெண்மலடன் சஞ்சரிக்குமிடத்தில்
    அதியாதேயமுதுண்ண வந்தேனென்றார்
கேட்டாயோபெண்ணே வெண்காட்டுநங்கையே
    கிழவனார்சொல்லுகிற சேதிதன்னை
பிசைந்தகெஞ்சாவெறியால் பித்தனாரையர்
    ஒடியேவிருந்துண்ண வருவேனென்றார்

சந்தனுக்கொருபிள்ளை யிருக்குதுசுவாமி
யெண்ணுவிதங்களைத சொலவதென்றார்
அறுத்துக்கறிசமைக்கச் சொன்னாரேசுவாமி
அப்படியேஅவருக்கு செய்துவைத்தோம்
பிள்ளையில்லாவீட்டில் கொள்ளேனென்றாலன்னம்
பெண்ணேநன்மோசங் களென்னசொல்வோம்
இல்லாதபிள்ளையிப்போ சொல்லாமேலவாருமோயினி
யென்னசொல்லப்போகிறோம் பெண்ணேயென்றார்
சொன்னசொல்மறதியாய் பேசுகிறார்சுவாமி
சொக்கப்பொடிமயக்கங் கொண்டவர்போல்
பொய்யானுமிவர்க்கு சொன்னோமேயாகில்
போஜனங்கொள்வாரிந்த ஜங்கமரும்
மலடனும்மல்லகா ளிவ்வடியாள்சிவனே
எங்கள்குடிக்கொரு பிள்ளையுமுண்டுசிவனே
தூரத்துக்குதூரம்வழி யவன்போனான்
உம்மிடதிடர்ந்தபசிக்குவந் துதவமாட்டான்
காதத்துக்குகாதவழி யவன்போனான்சிவனே
உம்மிடகடந்தபசிக்குவந் துதவமாட்டான்
மாமியார்வீட்டுக்கு மருவுண்ணப்போனான்
வருகவென்றால் வெகு நேரஞ்செல்லும்
இந்நேரவேளைக்கு வந்ததும்வாராது
இப்போதேவரமுது கொள்ளுமென்றார்
காதத்துக்குகாதவழி போனாலும்பத்தா
கடும்பசிக்குவந் துதவமாட்டான்
தூரத்துக்குதூரம்வழிபோனாலும்பத்தா
என்னுடையுகந்தபசிக்கு வந்துதவவேணும்
அழைக்கவுஞ்சொன்னதொரு மாய்கையானபடிசிவனே
அழைக்கவுஞ்சொல்லுகிறாரென்னசெய்வோம்
இனிசெய்வோமென்று இருவரும்பேசி
இருக்கின்றசெய்கைகளைத் தானறிந்தார்
வெள்ளிபிரம்புதந்தார் சொம்பில்சலந்தந்தார்
வெண்காட்டுநங்கையுட கைகொடுத்தார்
வாடிமகளாரே வெண்காட்டுநங்கை
மத்தியானவாசலிலே நின்றுக்கொண்டு
மத்தியானவாசலிலேமுக்தவாசல்நின்று
மகனேமகனேயென்று அழைமகனே
சொம்பில்சலந்தனை பூமியில்தெளித்து
திருக்கைபிரம்பதினால் தட்டியல்லோ
அழைபம்மாவெண்காட்டு நங்கைநீயென்றுசொல்ல
அந்நேரஞ்சுவாமிசொல்லைத் தான்கேட்டு

அவர்க்குற்றங்கள்பெண்ணே வாராமல்போய்நின்று
கூப்பிடுமென்றல்லோ அன்பன்சொன்னான்
ஐ ர்சொல்தட்டாமல் வெண்காட்டுநங்கை
அந்நேரந்தெருவாசல் வந்துநின்று
ஒப்புக்குதிருவெண்காட்டு நங்கையும்போய்நின்று
உயர்ந்தகுரலாகத் தானழைப்பாள்

சீராளன் வருகிறது,

நான்பெற்றமகனே வாராயோ தம்பி
கல்லறிவுசீராளா வாராயோடா
பள்ளிக்குப்பள்ளனே வாராயோ தம்பி
பாலகாசீராளதேவா வாராயோ
ஓங்கியகுரலாகத் தானழைப்பாளம்மாள்
ஓடிவருகுது பிள்ளைவீதியிலே
நீண்டதெருவிலே நெடுந்தெருகோடியிலே
நிலையுள்ள அன்பன்மகன்வருகிறான்
நெடியபுத்தகத்தைக் கையில்பிடித்து
நெடுந்தெருகோடிவழி எழுந்துவாரான்
தண்டைச்சிலம்புகளில் சதங்கைகுலுங்கவே
தம்பிசீராளன்தெருவில் எழுந்துவாரான்
அறுததபாலகாயங்கள் மேலேமணக்கவே
அன்பன்மகனிங்கே யெழுந்துவாரான்
வந்ததொருபிள்ளையை மருங்கழைப்பளேவென்று
தம்பிரானும்கையிலாசம்போய்யொளித்தார்
தம்பிரானேகாணேமென்ற சொன்னசொல்கேட்டு
தட்டிவிட்டாள்பிள்ளையை புறங்கையாலே
தம்பிரானுங்கைலாசம் போயொளித்தார்
வந்ததொருபிள்ளையை புறங்கையாலடித்தல்லோ
தேவரைநினைத்து தானழுவாள்
வெண்காட்டுநங்கையம்மாள் அழுகிறசத்தம்
உமையவள்பார்வதிக்குக் கேட்டிடுமாம்
சந்தனநங்கையாலழுகிறசப்தம்
அறுபத்தோருகொடிமுடி யதிர்ந்திடுமாம்
சிறுத்தொண்டபத்தனா ரழுகின்றசத்தம்
சிவனார்திருச்செவியி லடிபடுமாம்
சீராளதேவனா ரழுகிறசத்தம்
கந்தன்கணபதிக்குக் கேட்டிடுமாம்
தான்பெற்றபிள்ளைதனை தாயுந்தகப்பனும்
தப்பாமல்லவிவர்க ளடிக்கலுற்றா
நீவந்தல்லோசுவாமி மறைந்துபோனாய்

திஷ்டிரபாலராயிங்கே நீயென்வந்தாய்
இவர்கள் புலம்புகிற்சத்தந்தன்னைக்கேட்டு
ஈஸ்வரியென்னசொல்வாள் சுவாமியுடன்
அன்னக்கொடிவிருதை அறுப்பேனென்றாட்சுவாமி
அவனுடன் அன்புபத்தி சோதிபென்றாரும்
ஆருமகப்படாமல் நீயேயொருவராய்
அவனுடமடத்துக்கு நீர்போயி
வழங்குங்கறிவகைகள் வேண்டாமென்றுசொல்லி
வழங்காக்கறிவகை நீர்கேட்டீர்
பிள்ளைக்கறியுஞ்சோறும் போட்டாயேயானல்
போசனங்கொள்வோமென்றீர் அவன்மனையில்
பிள்ளையறுத்துக் கறிசமைத்துஉனக்கு
போசனந்தந்தவர்க்கு மோசம்பண்ணி
சிந்தைகலங்கியவர் தேடிப்புலம்ப
சிவனாரேஉந்தனைத்தான் காணாமல்
அவர்கள்புலம்புகிற ஸப்தங்களிங்கே
அறுபத்துநாலுகொடிமுடி அதிர்ந்திடுமாம்
வெள்ளைவிடையிலேறி சிறுத்தொண்டர்பக்கல்
விமலரேகாட்சிதர வேண்டுமென்றாள்
பிள்ளையறுத்துண்ணவரப் போனேடிபெண்ணே
பொய்யன்மெய்யனேவென் றறியப்போனேன்
சொன்னசொல்தவருண்டி சிறுத்தொண்டபத்தனே
சோதித்தேனென்னலே யானமட்டும்
அறுத்தபிள்ளையெழுப்பி அவன்வீட்டில்விட்டேன்
ஆருமறியாம்லே வந்துவிட்டேன்
அவனுக்குமோட்சம் கொடுக்கவேணும்
ஆதியுமையவளே யெழுந்திரென்றார்
வெள்ளைவிடைபின்மீதில் விமலருமேறினர்
வீற்றிருந்தாளுமையாளும் பக்கலிலே
மூஷிகவாகன மேறினர் விநயர்கர்
முருகர்மயில்வாகன மேறுகிறார்
அன்னவாகனமேறி பிர்மாவும்வாரார்
அம்மன்சிம்பவாகன மேறனளே
மாயன்கெருடனேறி வருகிறாரங்கே
வானவருனிந்தரன் வருகிறார்
ஆளிவாகனமேறி அழகாய்வீரபத்திரர்
அவரொருபுறமாக வருகிறார்
முப்பத்துமுக்கோடி தேவருடனே
முனிவரிஷிகளுடன் வருகிறார்
நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளொருபக்க

நரகலோகத்தாரொரு பக்கம்வருக
கின்னரர்கிம்புருடர் சித்தவித்யாதரர்
கெருடகாந்தருவர் வருகிறார்
ஆதிசிவனுடனே அனைவருஞ்சூழ்ந்து
அரகரவென்றசத்தஞ் செய்துவாறார்
சங்குநாதத்தொனிகள் செயகண்டிவாத்தியம்
ஸப்தசமுத்திரம்போல் கோஷ்டமிட
ஆகாசவீதியிலே ஆதிசிவனுடன்
அனைவருங்கூடியங்கே வந்துநின்றார்
வெள்ளைவிடையைவிட்டு விமலரிங்கி
வேறொருசங்கமரைப் போலானார்
அழகிறசிறுத்தொண்டன் பக்கலுக்குவந்து
ஆரட[illegible]க்தொண்ட பக்தாவென்றார்
உம்மைப்போலேயொரு சங்கமனார்வந்தார்
உறுதியாய்போசனந் தருவேனென்றேன்
பிள்ளைக்கறியுஞ்சாதந் தின்னவேயிங்கே
பொருந்தியிருந்தாரிங்கே விரும்பவில்லை
அறுத்தபிள்ளையெழுந்து வந்ததுசுவாமி
அவர்வந்திருந்தயிடம் வனமாச்சு
ஈஸ்வரர்வந்தாரென்று தெரியாமல்போச்சுது
ஏமாந்திருந்தோமவர்வெளியானார்
மோசங்கள்செய்து மகாதேவரெங்களை
மோட்சங்கொடுக்காமலே அவர்போனார்
காண்போமேயானால் நாங்கள்கொண்டபலந்தீர்வோம்
காணாமல்போனாலே உயிர்விடுவோம்
நான்தாண்டாசிறுத்தொண்ட பத்தாயுன்னிடத்தில்
காதருஞ்சோதிக்க வந்தேனென்றார்
மண்ணுலகத்திலே வாழ்கிறையோபத்தா
பொன்னுலகத்திற்கு வாராயோடா
மண்ணுலகத்திலே வாழ்ந்தாச்சுசிவனே
பொன்னுலகத்திலேவாரேனென்றார்
பொன்னுலகத்திற்கு வாரதேயுண்டானால்
ஏறும்பிள்ளா யிந்தாரதமேறு
நீரொருவனுமாக வருவனோசுவாமி
நாதரேஒருவார்த்தை சொல்லுகிறேன்கேள்
உப்பிடுந்துணைகள் வேணுந்தம்பிரானே
உதவித்துணைகள்வேணுந் தம்பிரானே
நெருப்பிந்துணைவேணுந் தம்பிரானேசிவனே
நீரிடுந்துணைவேணுந் தம்பிரானே
அந்தண்டையேழு யிந்தண்டையேழு
எழுபேழுபதினாலாக வேண்டுமென்றான்

உன்னோடேபதினைந்து வீட்டோர்டேகயிலாயம்
உன்புறம் வருவேனென்றாய்
தன்னோடேசெய்தபலந் தன்னோடேயல்லாமல்
பின்னையொருத்தருக் குதவியோண்டோ
உத்தனைவாருமென்றால் சிறுத்தொண்டபத்தா
ஊரெல்லாம் கூட்டுகிறாயொன்றாக
நான்செய்தபாவங்களில் பாதிபகுந்திட்டு
நாதரேமோட்சந்தரவேணுமையா
மூவஞ்சிபதினைஞ்சி வீட்டுக்காரருக்கு
மோட்சங்கொடுக்கவேணும் சுவாமியென்றார்
பார்த்தாயோபெண்ணேஉமைபார்வதியாளே
பாலகன்சொன்னவார்த்தைகளை
அன்பன்சொல்தப்பாதே ஆதிசிவனாரே
அறுபத்தொருகொடிமுடி. உடங்குமென்றாள்
ஏறும்பிள்ளாயிந்திர ரதமேறும்பத்தா
யேழுயேழும்பதினாலாக வந்தமரும்
சிறுத்தொண்டன்வீட்டோடே பதினைந்துவீட்டுக்காரர்
தெய்வபுரங்கூடி தான்வாரார்
ஆகாசகெந்திருவர் புட்பமதனைக்கொண்டு
அடர்ந்தவிருபுறமும் மழைபொழிய
ரம்பையூர்வசியாள் மேனகைதிலோர்த்தமை
நடனங்களாடியே முன்னேவர
அடுத்தான் கயிலாச முகசாலைவாசல்
அறிந்தாரேகணபதி யெண்ணமிடடார்
பெண்சாதிசம்மதிக்க சொன்னசொல்லெல்லாம்
பொய்யாகப்போச்சுதென்று ஏதுசொல்வார்
ஆரடாதெய்வபுரம் வாரவனென்று
அதட்டினார்வேழமுக முடையோனும்
சனியன்மகுத்துவத்தால் சிறுத்தொண்டபத்தன்
தானென்றவாணுவமா யேதுசொல்வான்
பிள்ளையறுத்துக்கறி ஜங்கமருக்கிட்டு
பேறுபெற்றிங்கேவாரேன் தெய்வபுரம்
ஆரடாயிங்கேவந்து அதட்டுவதென்றார்
அறிந்தாரே ஆதிசிவனாரும்
பிள்ளையறுத்திட்ட பெருமைகள்சொன்னாய்
பொறுடாசிறுத்தொண்டா நில்லுமென்றார்
தேரையுந்நிறுத்துமென்றார் சுவாமியுமந்நேரம்
சிந்தைகலங்கியம்மன் திகைத்துநின்றாள்

வரம்பெறவெண்காட்டு நங்கையுமன்னேரம்
வந்தாளேதேரைவிட்டு தானிறங்கி
மன்னவனார்சொன்ன பிழைபொறுத்துசுவாம்
மங்கிலியப்பிச்சை தாருமென்றாள்
அன்பனார்செய்தபிழை தேவர்பொறுத்து
அறுபத்தொருகொடிமுடி யடங்குமென்றார்
ஆதியிலேஉனக்கு வாக்குகள்கொடுத்தேன்
அழிப்பதுமொருக்காலு மில்லையம்மா
தெய்வபுரத்தைவிட்டு திரும்பெல்றசொன்னேன்
திருவாக்குதவா வொண்ணுதுகண்டாய்
புத்தியில்லாமனுஷன் சிறுத்தொண்டபத்தனை
பூலோகந்தன்னிலே கொண்டுபோயி
அவனைப்போல்பத்த னேகம்அவனியில்
கொண்டுபோயறியவே தெரியவைத்து
தெரியப்படுத்தியல்லோ சிறுத்தொண்டபத்தனை
தெய்வபுரமங்கே கூட்டிவாரேன்
மறுபடியும் சிறுத்தொண்டபத்தன் பூலோகம்வருகிறது.
இங்கேயிரும்வெண்காட்டு நங்கையம்மாளென்று
யிரங்கினாரிருவரும் பூலோகம்
பூலோகம்வந்திறங்கி யிருவருமாக
போறார்காரைக்காட்டம்மையண்டை
ஆதியிலேவேளாளர் குலத்திற்பிறந்து
அஞ்சுபிராயத்தில் விவாகஞ்செய்து
தவஞ்செய்தொரு பிள்ளையைமெறுமவள்
பின்பல்லோ தன்னுடைய கணவனாரிறந்தால்
ஒருவர்பொருளெனக்கு வேண்டாதுமண்டோதரி
ஒருபிள்ளையுடனூரில் வாழ்ந்திருந்தாள்
கூலிக்குக்குத்தியல்லோ காரைக்காட்டம்மை
கொண்டுவந்துஒருக்காலே சேர்க்கிறது
அகத்திலொருவருக் கன்னங்கொடுப்பாள்
அதிதிபரதேசிகளானவர்க்கு
தவிடுகொய்யுயாகவே களியாய்கிளரி
தன்பிள்ளையுந்தானுமாய்க் கொள்ளுறதும்
அமுதுபடியெடுத்து கறிகள்சமைத்து
அகத்திற்கொருவர்க் கன்னந்தான்கொடுப்பாள்
இப்படியிருக்கிற நாளையிலீஸ்வரர்
இவள்மனதை சோதிக்கவருகிறார்

சிறுத்தொண்டனையழைத்து தெய்வபுரம்விட்டு
திரும்பினார்பூலோகந் தன்னிலேதான்
தம்பிரான்போலேயல்லோ சுவாமிவடிவானார்
தபசுபிள்ளையுமான என்பனவன்
காரைக்காட்டம்மைபதிதேடிவந்தாரிருவர்
காலிகள்மேப்பானவன் புத்திரனும்
ஊரார்காலிகள்மேய்த்து அவளுடபிள்ளை
ஒருவனுமேதனித்து போயிருப்பான்
அந்தவேளையில்சுவாமி சங்கமரைப்போல்வந்து
அடித்தாரேசெயகண்டி வாத்தியத்தை
சங்குநாதமொதாணிகள் சத்தங்கள்தான்செய்து
தலைவாசலிருவரும் வந்துநின்றார்
கேட்டாளேகாரைக்காட்டம்மையுமந்நேரம்
கெண்டிகையிற்சலமும் புஷ்பமுங்கொண்டுவந்து
பாதந்துலக்கியம்மாள் பட்டால்துடைத்து
பத்திரபுஷ்பங்கொண்டு அர்ச்சனைசெய்தாள்
கைகட்டிவாய்புதைத்து காரைக்காட்டம்மனும்
கர்த்தரைப்பார்த்தொரு வசனஞ்சொல்வாள்
எங்கெங்கும்நீயாசி தங்கினவாபோற்றி
பேழையைக்காக்க வந்தாள்போற்றி
திங்களணிந்தமுடி கெங்கைகைதரித்த
செம்பொனம்பலவானரே போற்றிஐயா
அடியேன்மடத்தில் தேவரமுக்குநில்லும்
அதிதிக்குஒருவிரதம் சுவாமியென்றாள்
மணிரெண்டுமணிநேர மிங்குவந்து
பசியாறிப்போங்களிருவர் சுவாமியென்றாள்
அப்படியேகல்லதம்மா அமுதுக்குவாரேன்
அடுத்ததெருவிலொருவ ரமுதுசொன்னார்
அங்கையும்பொய்யாச்சுது வாரேன்தாயே
அரைநாழிகை சொல்லுமென்றார்
அமுதுக்குச்சம்மதித்து அம்பலவாணர்
இவளுடபிள்ளைபக்கல் தேடிபோனார்
மாடுகள்மேய்த்தல்லோ மரத்துநிழலில்
மந்தைமடக்கியவ னங்கிருப்பான்
அஞ்சுபிராயபிள்ளை அறியாக்குழந்தை
அவனுடையபக்கலுக்கு ஓடிவந்தார்
ஆரடாதம்பியுன் தாயாரழைக்கிறாள்
அமுதுபொசிக்கவுன்னை கூப்பிடுகிறாள்
ஆனாள்கேள்தம்பிரானே அசலார்கள்மாடல்லோ
அடுத்தவயலில்போரில் போய்விழுந்தால்

தெண்டம்பிடித்திடுவார் தீவானத்தார்கள்
திருக்கையில்கோதண்டம் போட்டிப்பார்
எப்படிக்கியான்போவே னென்றானேபிள்ளை
யேதுசெய்வாராதி சிவனாரும்
நீபோய்வருமளவும் மாடுகளைமேய்த்து
காவாலாயிருக்கிறேன் தம்பியென்றார்
அமுதுவைத்துக்கொண்டல்லவோ யழைக்கிறாள்
அரைநாழிகைக்குள்ளாகத்தான் வாருமென்றான்
நான்போய்வருமளவுமிங்கேயிருமென்று
நடந்தானேயறியாதபிள்ளையுந்தான்
இவனங்கேபோகுமுன்னே காரைக்காட்டம்மை
பிருநாழி[illegible]க்கொண்டு தான்சமைத்து
காரைக்கீரையுந்தவிடுப[illegible]களியாகக்கிளறி
கர்த்தருக்கற்புதமா யிறக்கிவைத்தாள்
சத்துமமுத்துவைய லரைத்துவைத்து அம்மாள்
தண்ணீர்க்குடமெடுத்துப் புறக்கடைக்கு
அந்தவேளையில் சுவாமியனுப்ப
அவனிடமாளிகையை யோடிவந்தான்
சாதம்வடித்துக்கொட்டி ஆறவைத்திருக்கும்
தவிடுக்களியுந்தின்ன பிள்ளையல்லோ
கண்டவுடனேபிள்ளை கலத்தையெடுத்தல்லோ
கையினால்சாதங்கொஞ்சம் அள்ளிவைத்து
ஆவலுடன்கீரையுஞ் சாதமும்பிசைந்து
அள்ளிஉண்ணயில்தாயார் வந்துவிட்டாள்
தண்ணிக்குப்போன் தாயாரன்னேரம்வந்து
தன்னிடபிள்ளைதனைக் கண்ணில்கண்டாள்
கண்கள்பொறிபறக்க கடுங்கோபமாகி
கையாலுலக்கை யைத்தூக்கிவந்து
சங்கமருக்கன்னமல்லோ சமையல்செய்துவைக்க
சடுதியில்நாய்வந்து வாயைவைத்து
ஏந்தன் தவத்திற்கு இடர்வந்ததென்றல்லோ
யிருகையாலுலக்கையைத் தான்கழற்றி
அடித்தாளேபிள்ளையிட மூளைசிதற
கண்ணாலுங்காதாலும் வாயாலுஞ்சீவன்
கதறிவுயிர்தானிங்கே போகையிலே
அறிந்தாரேயன்னேரம் ஆதிசிவனாரும்
ஆகாயம்போமுயிரை வாருமென்றார்

செங்தாமரைக்சிமிளில் பதனங்கள்செய்து
சிறுத்தொண்டனையழைத்து சுவாமியாரும்
மர்தைக்குகாவல்சில தூதரைவைத்து
வருகிறார்சுவாமியவ ரன்னேரம்

மறுபடியும் சுவாமிவருகிறது.

தெருவாசல்வந்துநின்று இருவருமாக
செயகண்டிவாத்தியத்தைத் தானடித்தார்
அரகராசத்தஞ்செய்து ஆதிசிவனாரும்
அன்னம்போடுமம்மாவென் றேவருவார்
பசிவேளைக்குத்தந்தால் அம்பலவாணர்
பத்திரந்தந்துனக்கே வரமளிப்பார்.
அறிந்தாளேகாளைக் காட்டம்மையுமந்நேரம்
ஐயரறிந்தாலழுது கொள்ளேனென்பா
எடுத்துப்புதைத்துஸ்நானஞ் செய்யவேணுமென்றாள்
இதோவந்தோம்சுவாமியா ரென்றுசொல்லி
ஐயர்போசனஞ்செய்து போயிற்பாடு
ஆருமறியாமல்நாம் புதைக்கவேணும்
பாயில்சுருட்டியல்லோ வாரியெடுத்து
பரணையிலொளித்து ஓடிவந்தாள்
ஐயருக்குப்பாதபூசை செய்துமலர்அர்ச்சித்து
அவளிடமாளிகைக்கு கூட்டிவந்தாள்
இந்நேரந்தேவரீ ரிளப்போடிருந்துவிட்டீர்
இப்போதுபோசனங்கள் கொள்ளுமென்றார்

போசனங்கள் பரிமாறுகிறது.

வீட்டமனைகொண்டு பாலித்திருவருக்கும்
வாழையிலையெடுத்துத் தான்போட்டாள்
தண்ணீர்தெளித்தல்லோ அன்னங்கள்படைத்து
தவிட்டுக்கீரைதுவையல் தான்படைத்தாள்
தாம்பூலந்தூபதீபந் தட்சணையும்வைத்து
தண்ணீரும்மொண்டுகையில்கொண்டுவந்தாள்
பசித்தவேளைக்கமுதுயென் கையினாலானது
பசியாறிப்போங்களிருவர் சுவாமியென்றாள்
கைகட்டிவாய்புதைத்து பின்னாலேநின்றாள்
கர்த்தரேதேவமுது கொள்ளுமென்றாள்
போசனங்கொள்ளுமென்ற யென்தாயேகேளும்
பிள்ளையில்லாவீட்டிலுண்ணேனென்றார்
அழும்பிள்ளைகுரலோசைகேட்டதில்லையம்மா
அப்பாமகனேயென்ற சொல்லுமில்லை

மலடியாய்க்காணவில்லை யென்தாயேநீதான்
மைந்தனையீன்றவள்போல் காணுதம்மா
பிள்ளையிருந்தாக்கா லென்தாயேநீதான்
போசனங்கொள்ளுதற்கு அலையுமென்றார்
ஆறுதலுரைக்கிறேன் தம்பிரானே சிவனே
அடியேனுக்கொருபிள்ளை யுண்டுகண்டாய்
எந்தன்புருஷனிறந்த பிற்பாடுபிள்ளை
யிருந்தது அஞ்சி பிராயமட்டும்
கொண்டதவங்கள்பாதி குறையாகப்போச்சுது
கொள்ளுங்கள்மு சுவாமியென்றாள்
எந்தனுக்கொருபிள்ளை யுண்டுகாண்தேவா
யிறந்துமடிந்தும்தெய்வ புறம்போனான்
இறந்துமடிந்துதெய்வ போனபிள்ளை
இப்போதுதேவர்க் குதவுமோதான்
அதனாலேகுற்றமில்லை தம்பிரானேசிவனே
அடியேன்மலடியல்ல வழுதுகொள்ளும்
மாண்டுமடிந்தாலும் வைகுந்தஞ்சேர்ந்தாலும்
வருந்துபசிக்குவந் துதவவேண்டும்
செத்துமடிந்தாலுஞ் சிவபுரஞ்சேர்ந்தாலும்
சிறுபிள்ளைபசிக்குவந் துதவவேண்டும்
பிள்ளையில்லாவீட்டில் போசனஞ்செய்வேன்
பொற்கொடியேநானெழுந்து போறேனம்மா
கெஞ்சாக்குடுக்கையும் கையில்மாத்திரைக்கோலும்
கமண்டலம்ஆசனத்தைத் தானெடுப்பார்
போசனங்கொள்வதில்லை போறேனம்மாவென்று
புலித்தோலாசனத்தைத் தானெடுப்பார்
ஐயர்பிணக்குகளை மெய்பாவறிந்தல்லோ
அரகராநாமிதற் கென்னசெய்வோம்
பிசைந்த கெஞ்சாமனத்துக் கிசைந்தபடியே
பேசுவார்மனங் கொண்டபடியாக
மாண்டுமடிந்தபிள்ளை வரவேணுமென்றால்
மண்டலத்திலில்லாத வார்த்தைசொன்னார்
செத்துமடிந்தபிள்ளை திரும்பிவரவேணுமென்றால்
தேசத்திலில்லாத வார்த்தைசொன்னார்
ஆறுதலுரைக்கிறேன் தம்பிரானேஐயா
அடியேன்வளர்த்ததொரு நாயுமுண்டு
ஒசந்திபரவனென்று உந்தியிலென்றாலும்
ஓடிவந்துவாயை வைத்ததுதான்
கூலிக்குகுத்தின்ன வுலக்கையினாலே
கொண்டதுகொண்டபடி யானடித்தேன்
கையாலடித்ததுமெள்ளக்காதுப்பற்றியிழுத்து

கண்காணப்பிணமாகத் தானெறிந்தேன்
  அந்தப்படியேவும்மை நானடிப்பேனென்று
அவள்கையுலக்கைதன்னைத் தானெடுத்தாள்
  அன்னங்கொண்டால்தேவ ராச்சுதுசுவாமி
அகடுசெய்தலுக்கை யாலடிப்பேன்
  இல்லாதபிள்ளைபிப்போ பெங்கேயிருந்துவரும்
என்னையனேயெங்களிட குலதெய்வமே
  கையாலுலக்கைகொண்டு கரைக்காட்டாள்நிற்க
கண்டல்லோசுவாமியுமே சிரித்தார்
அறிந்தாயோசிறுத்தொண்ட பத்தாவுன்மனதில்
  அறுத்தேன்பிள்ளையையென்று பெருமைசொன்னாய்
உனக்காகிலுமொரு பிள்ளைபிறந்தாலுந்
  தேவியிருக்கப்பிள்ளை யுண்டெனடாய்
அவளுக்குமணக்கோல மில்லையடாபத்தா
  ஆனாலும்புருஷனில்லா விருந்தையல்லோ
இருந்தோருபிள்ளை யிருந்தாலொருபிள்ளை
  இதைவிடவேறேகதி யில்லையொட
நாயையடித்ததொரு கடியாலேயிங்கே
  நாமுமடிபட வந்தோமடா
இவளைப்போலேதவ முள்ளவளேபத்தா
  ஈரேழுலகந்தேடக்கிடையாது
பிள்ளையறுத்துக்கறி சமைத்திட்டேனென்று
  பெருமையாய்ச்சொல்லவந்தாய் தெய்வபுரம்
உன்னிலுமிகுத்தோ ருறுதிபடைத்தவர்
  உலகத்திலேமேலான பேர்களுண்டு
இன்னுமிவள்மனதை சோதிப்போமென்று
  யேதுசொல்வாரவள் முகம்நோக்கி
அன்னமேதாயேநான் சொன்னசொல்தட்டாதே
  ஆதிசிவத்துக்கொப்பாய்ச் சொல்லுறேன்
மகனேமகனேயென்று மூன்றுசொல்கூப்பிடும்
  மாதாவேபோஜனம்நான் கொள்வேனென்றார்
ஐயர்சொல்தட்டாமல் நானுமழைக்கிறேன்
  பிள்ளையைத்தப்பாம லிப்பொழுது
அப்பாமகனே பரந்தாமாவென்றுபிள்ளை
  அழைக்கிறாளதிக குரலோசையர்ய்
வாயில்கருட்டியல்லோ பரணையின்மேல்வைத்த
  பிள்ளைதான்பதைக்கவுயிர் வந்திடுமாம்
செந்தாமரைச்சிமலர் விருந்தவுயிலரையப்பேர
  பிள்ளையுடலில் தான்விடுத்தார்
உயிரைவிடுத்தளவில் உருண்டுதிரண்டுபிள்ளை
  உம்பர்பிரான்முன்னேவந்து தான்பணிந்தான்

128180

அப்போதுடம்பர்பிரானென்றுமிக்ககளித்து
மாதாவைத்தர்மமைழத்து யேதுசொல்வார்
எந்தனுக்காகவுன் மைந்தன்தலையுடைத்தாய்
இப்போதுகயிலாயம்வாங்களென்றார்
அந்தவசங்கேட்டு காரைக்காட்டம்மாளும்
அதிகமகிழ்ந்துதானு மேதுரைப்பாள்
அப்படியேநானும்ன் சொற்படியாகவே
நாதருடனேசபைக்கு வாரோமென்றாள்.
வாருமென்றுசொல்லி விமலருமப்போது
வான்புஷ்பவிமானத்தி லெழுந்தருளி
சிறுத்தொண்டபத்தனும் காரைக்காட்டம்மனும்
சிறுவனுமாகபோய் மறைந்தார்
தம்பிரானப்போது சிறுத்தொண்டனைப்பார்த்து
தயவாகமுகம்நோக்கி யேதுசொல்வார்
உன்மைந்தனைக்கொன்று எனக்குவிருந்துசமைத்து
மகாபெரியதவமென்று தானுரைத்தாய்
காரைக்கட்டம்மைசேதி கண்டாயோபத்தா
கனிவுடனே அன்பாயின்ன மெத்தவுண்டு
என்றுசொல்லிதம்பிரான இத்தாதிபேருக்கும்
இந்திரனார்லோக பதவிதன்னை
சிறுத்தொண்டபத்தனால் பூலோகத்திற்சிலபேர்
நேர்ந்தார்கள்சிவனது பதவியிலே
இந்தைக்கதைதன்னை படித்தோர்கள்யாதரும்
இந்திரனபதிவிதன்னை யடைந்திடுவார்
சிறுதொண்டபத்தன்கதை சிறப்போடுகேட்போர்கள்
சீராகப்படிப்போர்கள் தான்வாழி
மண்டலத்திற்சிறுத் தொண்டன்கதைதன்னை
சிறப்பாகஅச்சிலிட்டோர் சிவன்மதம்பெற்றுவாழ்வார்
சீராளன்தேவகதைசிறப்பாகப்படிப்போர்கள்
செகதலத்திலென் னுளும்வாழி
திருவெண்காட்டு நங்கைகதை
நான்படித்தோருபூவுலகில் மிகவாழ்வார்
வாழிவாழியிக்த் மண்டலந்தனிலுள்ள
தேவர்களும்மானிடருங் கன்னியப்ப நாயகரும் தான்வாழி

சிறுத்தொண்டபத்தன் கதை
முற்றுப்பெற்றது

1915

MADRAS & SOUTHERN MAHRATTA RAILWAY Co., Ld.

From

SUPERINTENDENT OF STORES,

PERAMBUR, MADRAS.

No.

Dated 1915

To

Hubli

Subject

Reference

DEAR SIR.